உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (03-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:128

# பிரிட்டனில் புலிகள் மீதான தடையை ஆட்சேபித்து சட்டரீதியான நடவடிக்கை

## அங்குள்ள தமிழர் அமைப்புகள் ஒன்றிணைந்து தீவிர முயற்சி

லண்டன்,ஏப்ரல்3

**விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்ததை எதிர்த்து, அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் உரிய நடவடிக்கை எடுக்கவும் மேன்முறையீடு செய்யவும் அங்கு முனைப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.**

இந்த நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் அமைப்போ, அவற்றின் ஆதரவு அமைப்புகளோ நேரடியாக ஈடுபடும் சாத்தியம் ஏதும் இல்லை என்றும் -

பிரிட்டனில் உள்ள தமிழ்ப் பிரமுகர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளே ஒன்றிணைந்து முழுமூச்சாக இந்நடவடிக்கைகளில் குதித்துள்ளனர் என்றும் - கூறப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை நாளை முதல் தினசரி மூன்றாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

பலாலி - இரத்மலானை விமான சேவை நாளை முதல் தினசரி மூன்றாக அதிகரிக்கப்படவிருக்கின்றது.

விமானப் பயணத்தில் இருந்து வந்த நெருக்கடி நிலையை அடுத்து சேவையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

விமானச் சேவையை அதிகரிக்க வேண்டும் என்று ஐதேகட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் விமானப் படைத்தளபதியிடம் கேட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இந்தச் சேவை நாளை முதல் அதிகரிக்கப்படவிருப்பதாக மகேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

(உ-3)

## விமானப் பயணத்துக்கான பதிவு வேலை மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

பலாலி - இரத்மலானை விமான சேவையில் பயணம் செய்வதற்கான பதிவு வேலைகள் மீண்டும் இன்று ஆரம்பமாவதாக வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

விமான சேவைகள் வழமைநிலைக்குத் திரும்பியுள்ளதால் இன்று முதல் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் முற்பகல் 11மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - கொடிகாமம் பஸ் சேவை தினசரி 2 முறை கண்டி வீதியூடாக

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ். கண்டி வீதி ஊடாக கொடிகாமம் வரை தினமும் இரு தடவைகள் பஸ் சேவைகளை நடத்த 52 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் குலதுங்க அனுமதி வழங்கியுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தமது அமைப்பின் தூதுக்குழு ஒன்று நேற்று பிரிகேடியர் குலதுங்கவுடன் கலந்துரை

(12ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் பிரார்த்தனை முடித்து ஊர்வலமாக யாழ்.மேயர் என். ரவிராஜ் தலைமையில் மாநகரசபை அலுவலகத்துக்குத் திரும்பும் மாநகர உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள்.

## யாழ்.மாநகரசபை நிர்வாகத்தை ஆதரித்து ஊழியர்கள் ஊர்வலம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ். மாநகரசபை நிர்வாகம் மீதும் மேயர், ஆணையாளர் ஆகியோர் மீதும் விசுவாசம் தெரிவித்து ஊர்வலம், பிரார்த்தனை ஆகியன நேற்றுக் காலை இடம்பெற்றன.

மாநகரசபை ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊர்வலம் முற்பகல் 10.30 மணிக்கு மாநகரசபையில் இருந்து ஆரம்பித்து நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடைந்தது. அங்கு பிரார்த்தனையும் விசேட அபிஷேகமும் இடம்பெற்றன.

மாநகரசபையின் சகல பிரிவுகளையும் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

ஆலயத்தில் இடம் பெற்ற பிரார்த்தனை நிகழ்வை அடுத்து ஊழியர்கள் மீண்டும் மாநகரசபைக்கு ஊர்வலமாக வந்தனர். அதில் யாழ். மேயர் என்ரவிராஜ் மற்றும் உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

அதைத் தொடர்ந்து உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க ஏற்பாட்டில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேயர், மாநகரசபை உறுப்பினர்களான ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) அமைப்பைச் சேர்ந்த த.சுபத்திரன், புளொட் அமைப்பைச் சேர்ந்த மு.தவநாதன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

(உ-3-6-9-10)

## ஈ.பி.டி.பியின் முழு ஆதரவுடன் குடும்பநல உதவியாளர்களின் உண்ணாவிரதம் நேற்று ஆரம்பம்

### அங்கு நேரில் தேடிவந்த மேயருடன் உரையாட மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் கடமையாற்றிய 36 குடும்பநல உதவியாளர்கள் மாநகரசபை அலுவலகம் முன்பாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

யாழ்.நாச்சிமார்கோயிலடியில் இருந்து நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பித்த குடும்பநல உதவியாளர்களின் ஊர்வலம் நகர வீதிகள் ஊடாகச் சென்று மாநகரசபையை அடைந்ததையடுத்து அங்கு உண்ணாவிரதம் ஆரம்பமானது.

பொலீஸாரின் பாதுகாப்புடன் இடம்பெற்ற இந்த ஊர்வலம் நகர வீதிகள் ஊடாக யாழ்.நீதிமன்றம், யாழ்.செயலகம், ஈ.பி.டி.பி. அலுவலகம் ஆகியவற்றுக்குச் சென்றது. தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் மகஜர்களை குடும்பநல உதவியாளர்கள் அங்கங்கு கையளித்தனர்.

மாநகரசபையை ஊர்வலம் அடைந்ததும் அங்கு உண்ணாவிரதம் ஆரம்பமானது.

வேலை நீக்கம் செய்யப்பட்ட குடும்பநல உதவியாளர்கள், அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பதவி விலக்கப்பட்டதாகக் கூறப்படும் அனைத்து குடும்பநல ஊழியர்களுக்கும் வேலையும் வேதனமும் வழங்கப்படும்

### கால அவகாசம் வழங்கி யாழ் மேயர் அவர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாநகர சபையால் பதவி விலக்கப்பட்ட குடும்பநல உதவியாளர்கள் வேலைக்குத் திரும்ப நாளை நண்பகல் 12 மணிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பதவி விலக்கப்பட்டதாகக் கூறப்படும் குடும்பநல உதவியாளர்களுக்கு யாழ்.மாநகர மேயர் நேற்று தனித்தனியாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடும்ப நல உதவியாளர்களின் குடும்ப நிலைகளை மனிதாபிமான ரீதியில் கவனத்தில் எடுத்து, மாநகர சபையின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் நேற்றுக் கலந்தாலோசனை நடத்தப்பட்டது.


தாமாகவே பதவி விலகல் கடிதம் வழங்கப்பட்டவர்களை உடன் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்வதென அங்கு முடிவு செய்யப்பட்டது.

இதன்படி பதவி விலகல் கடிதம் வழங்கப்பட்டவர்கள் உடன் வேலைக்குத் திரும்பலாம். வேலைக்குத் திரும்பியதும் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சம்பளங்கள் உடன் வழங்கப்படும்.

நாளை நண்பகல் 12 மணிக்கு முன் வேலைக்கு சமுகமளிக்கத் தவறியவர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படமாட்டாது.

வேலைக்கு சமுகமளிக்கத் தவறியவர்களுக்குப் பதிலாக பயிற்றப்பட்ட - சரியான கல்வித் தகைமையுள்ள - புதியவர்களை, தற்சமயம் தற்காலிகமாகப் பணிபுரிபவர்களில் இருந்து தெரிவு செய்தும், தேவை ஏற்படின் பகிரங்க விண்ணப்பம் கோரித் தெரிவுசெய்தும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.

(உ-3-10)



பதாகைகள் தாங்கி யாழ்.மாநகர சபையை நோக்கி ஊர்வலமாகச் செல்லும் குடும்பநல ஊழியர்கள். *(படங்கள்: கொனிகா கலர் லாப்)*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கண்டெடுத்தோர் கவனத்துக்கு

எனது மோட்டார் சைக்கிளின் 2000 ஆம் ஆண்டு வரிப்பற்றுச் சீட்டு, காப்புறுதி, **Driving Licence** ஆகியன 28-03-2001 புதன்கிழமை யாழ் அரசடி கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திரு.பூலோகசிங்கம், 545, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

*245/11, இராமநாதன் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

மயில்வாகனம் மகேந்திரன்
(மகம்).

(86182)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும், எமது பாடசாலை ஊழியருமான
**திரு. பூ.காளிதாசன்** அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி கா.சரஸ்வதி

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
*யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.*

(86203)

## மரண அறிவித்தல்

### திருமதி சச்சிதானந்தம் தங்கமணி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையைப் புகுந்த இடமாகவும் கொண்டு மானிப்பாயில் வசித்தவராகிய திருமதி சச்சிதானந்தம் தங்கமணி கடந்த 28.03.2001 இல் வவுனியாவில் காலமானார்

அன்னார் கந்தையா சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பாமா (பிரதேச செயலகம், சங்கானை), தயா(C.T.B, வவுனியா), லலிதா (சுவிஸ்), சிறி (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), ஆகியோரின் அன்புத் தாயாரும், காண்டீபன்(சுவிஸ்), விஜயராணி (ஆசிரியை, இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், ஜெயந்தன், சரணியன், கணேஸ்ராம், விகாசினி(சுவிஸ்), சங்கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற தில்லை நடராஜா மற்றும் மங்கையர்க்கரசி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாவதி, திரவியம், நவரட்ணம், சொர்ண புஸ்பம், ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.03.2001 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*க.சச்சிதானந்தம்.*
*மகாறம்பைக்குளம்,*
*பூந்தோட்டம், வவுனியா.*

(86200)

தகவல்:
பாமா(மகள்)
*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*

## நீர் விநியோகம் தடைப்பட்டது

வட்டுக்கோட்டை - சங்கரத்தைப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வீதியில் அமைக்கப்பட்டிருந்த நிலைகளில் இரண்டு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டதை அடுத்து இந்த விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் - இன்று முதல் மீண்டும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் - வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் தெரிவித்தார். (உ-3)

## BIT
### SEMESTER II
### விரிவுரைகள் ஆரம்பம்

**BIT** மாணவர்களுக்கான **SEMESTER II**ற்குரிய விரிவுரைகள் 08.04.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

**SEMESTER I**இல் எமது நிறுவனத்தில் கல்வி கற்கத்தவறிய மாணவர்கள் பதிவுக் கட்டணம் ரூபா 2500/= உடன் இப்பிரிவில் இணைந்துகொள்ள முடியும்.

இயக்குநர்
IIS,
*100,மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/16023)

## யாழ்மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## JAFFNA DISTRICT BAKERS CO-OPERATIVE SOCIETY LTD.
### அங்குரார்ப்பணக் கூட்டம்

*இடம்* : இல.3, கண்டி வீதி, யாழ்ப்பாணம்(பஸ்ரியன் சந்தி).
*காலம்* : 05.04.2001 வியாழக்கிழமை
*நேரம்* : முற்பகல் 11.00 மணி (புதிய நேரம்)
*பிரதம விருந்தினர்:* **திரு.எஸ்.கே.சண்முகநாதன்**
*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)*

மேற்குறிப்பிடப்பட்ட சங்கத்தில் சேர விரும்பும் வெதுப்பக உரிமையாளர்கள் அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகந்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- அமைப்புக் குழு.

(86198)

## கண்ணீர் அஞ்சலி

ஹரன் ஜுவல்லர்ஸ் உரிமையாளர்
திரு.சி.மார்க்கண்டு
அவர்களின் அன்பு மனைவி

### திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள்

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/16029)

உரிமையாளர், ஊழியர்கள்,
**வினோ நகைப் பூங்கா.**

## கண்ணீர் அஞ்சலி

ஹரன் ஜுவல்லர்ஸ் உரிமையாளர்
திரு.சி.மார்க்கண்டு
அவர்களின் அன்பு மனைவி

### திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள்

அவர்கள் 31.03.2001 சனிக்கிழமை அன்று காலமாகியதை இட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**தயா நகைப் பூங்கா,**
*213C, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(86201)

## நெஞ்சம் விட்டு நீங்காத நினைவலைகளும் மனதிலிருந்து மாறாத சோகங்களும்

### இரண்டாம் ஆண்டு

ஆண்டவன் தந்தார்
21
-
02
-
1983



அவரே அணைத்தார்
26
-
03
-
1999

**செல்வன் செல்வரத்தினம் இலங்கேஸ்வரன்**
(ரஞ்சன்)
(யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி, ஆண்டு 10 மாணவன்)
திதி:-03.04.2001

எம் அன்புச் செல்வமே!
இரண்டாண்டுகள் கழிந்தாலும் ஆறவில்லை எம் சோகம்!
மாறவில்லை எம் வேதனை எம்மைக் கண்ணீரில் தவிக்கவிட்டு
கடவுளிடம் சேர்ந்த மாயம்தான் என்ன?
உங்கள் பூமுகம் காண ஏங்குகின்றோம் நாம்!
அன்பு முகம் காணாமல் இங்கு வாடுகின்றோம்!

### ஏழாம் ஆண்டு

ஆண்டவன் படைப்பு
05
-
09
-
1976



அநியாய அழிப்பு
16
-
03
-
1994

**செல்வி சறோஜினிதேவி செல்வரத்தினம்**
(குஞ்சு)
(யா/புற்றளை மகாவித்தியாலயம் ஆண்டு 10 மாணவி)

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற தேவியே!
இருவிழி சிந்திய நீர்த்துளி இன்னும் காயவில்லை தேவியே!
அதற்குள்ளே ஏழாண்டுகள் ஆனதம்மா! எங்கள்
விழி எல்லாம் நீர் தேங்கி நிற்கிறதம்மா!

உங்கள் இருவரின் ஆத்மாவும் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, அண்ணாமார்,**
**அக்கா, தம்பி, தங்கைமார்.**

நிரந்தர முகவரி:-
*கரணவாய் மேற்கு,*
*கல்லுவம்.*

(86181)

தற்காலிக முகவரி:-
*'தேவி இல்லம்',*
*மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி முன்வீதி,*
*புலோலி தெற்கு, புலோலி.*


**ராஜா** யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
விஜயகாந்த், மீனா,
பிரபுதேவா நடிப்பில்
**வானத்தைப்போல**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
11.04.2001 முதல்
**ரோஜாவனம்**
(C/16095)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அஜித்,
கார்த்திக், மீனா
நடித்த
**ஆனந்தப் பூங்காற்றே**
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)
(86202)

**லஷ்சுமி** இணுவில்
இறுதி நாளாக
விஜயகாந்த், மந்த்ரா,
செந்தில் நடிப்பில்
**சிம்மாசனம்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.20 (பு.நே.)

**ஸ்ரீ செல்வா சினிமா**
ஸ்ரான்லி வீதி,
சரத்குமார், விக்ரமன்,
தேவயாணி, குஷ்பு
நடித்த
**விண்ணுக்கும் மண்ணுக்கும்**
புதிய வெளியீடு (நேரடி CD)
தினசரி 10.30, 2.30, (பு.நே.)

# உதயன்

## நல்ல ஆரம்பமாகட்டும்!

அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத — தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள — பிரதேசங்களுக்கு பொதுமக்கள் எடுத்துச்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்களில் சிலவற்றின் மீதான தடை நீக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட சில பாவனைப் பொருள்களின் மீதான தடையைத் தளர்த்தும் வர்த்தமானியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா வெளியிட்டுள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான முன்னோடி நல்லெண்ண நடவடிக்கைகளில் ஒன்றாக, பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் வன்னிப் பிரதேச மக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் பகுதியைச் சேர்ந்த மக்களும் பலனடைவர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீதான பொருளாதாரத் தடை — தேவையான பாவனைப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான தடை — 1990 ஆம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டுவிட்டது.

அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே போர் நடைபெற்ற போதிலும் பாதிப்பு பொதுமக்கள் தலையிலேயே வந்து விழுந்தது. ஒரு நாட்டின் குறிப்பிட்ட பகுதி வாழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை அரசாங்கம் விதிப்பது சம்பந்தப்பட்ட மக்களை நாட்டின் பிரஜைகளாக மதிக்காமைக்கு ஒப்பானதாகும்.

தமிழ் மக்களை நாட்டின் சொந்தப் பிரஜைகள் என்று கொழும்பு அரசுகள் கருதினால், போரினால் பெரியளவில் பாதிக்கப்படுவதற்கு மேலதிகமாக அம்மக்களை பொருளாதாரத் தடையைக் கொண்டு மேலும் இன்னல்களுக்கு ஆளாக்கமாட்டாது என்று அப்போதே எடுத்துக் காட்டப்பட்டது.

ஆயினும் ஆட்சியில் இருந்தவர்கள், ஆட்சியில் இப்போது அமர்ந்திருப்பவர்கள் என்ற சகல தரப்பினருமே அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதாரத் தடை இல்லாவிடில் பொதுமக்களுக்கென அனுப்பப்படும் பொருள்களில் பெரும்பகுதி புலிகளின் கைகளுக்கே போய்ச் சேரும். அது எதிரிக்கு அரசே உணவூட்டுவதாகவும், போரிடுவதற்கு உதவுவதாகவும் இருக்கும் என்று அரச தரப்பில் காரணம் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தும் போது அரசாங்கம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்து வகைகளைக் கூடத் தேவைக்குக் குறைவாகவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அனுப்பி வந்தது. எனினும் அரசு அதனையும் அவ்வப்போது மறுத்தது.

இத்தகைய ஒரு பின்னணியில் குறிப்பிட்ட சில பாவனைப் பொருள்களுக்குப் பொருளாதாரத் தடை நீடிக்கப்பட்டிருப்பது —

சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்குப் பெரும் ஆறுதலைத் தரும். அவர்களின் நீண்டகாலக் கஷ்டம் நீங்கும்

இதனைத் தொடர்ந்து மக்களின் ஏனைய அவலங்களும், இன்னல்களும் நீக்கப்படுமுகமாக, சமாதானப் பேச்சுக்கள் தடங்கலும் தாமதமும் இன்றி ஆரம்பமாக வேண்டும். இதனை ஒரு நல்ல தொடக்கமாகக் கொண்டு இரு தரப்பினர்களும் மக்கள் நலனை முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வெற்றி ஈட்டுவாராக!

## குடும்பநல உத்தியோகத்தர் இல்லாத ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இதுவரை குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான 'கிளினிக்'குகளை நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

38 குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்குத் தேவை இருந்தும் தற்பொழுதுஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. இதனால் ஊர்காவற்றுறை சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களை மீள ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளதாக மேற்படி பணிமனையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, புளியங்கூடல் தாய்—சேய் நலன் பேணும் நிலையம் என்பவற்றில் நடைபெறும் கிளினிக்குகள் வேலணை அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் குடும்பநல சேவை உத்தியோகத்தரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எழுவைதீவுப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் பிரதி புதன்கிழமைகள் தோறும் திறக்கப்படுகின்ற போதும் அங்கு குடும்பநல உத்தியோகத்தர்கள் இன்மையால் சிகிச்சைகள் இடம்பெறுவதில்லை. இதனால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் கிளினிக்குக்காக ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலைக்கே வர வேண்டியுள்ளது. (ம-16)

## ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக் கடிதங்கள்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த 50 ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்ட கடிதங்கள் வலய அலுவலகத்துக்கு நேற்று வந்துள்ளன.

24 ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை தரம் I க்கும் 26 ஆசிரியர்களுக்குத் தரம் II . 1 க்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (க-117)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

வடக்கு மீள் குடியமர்வு, புனரமைப்பு அதிகாரசபையின் ஏற்பாட்டில், இலங்கை நிர்வாகசேவை, இலங்கை கணக்காளர் சேவை ஆகியவற்றுக்குத் தோற்றுபவர்களுக்காக நடத்தப்படவுள்ள பயிற்சி வகுப்புக்களுக்கான விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் இறுதித் திகதி கடந்த 31 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது விண்ணப்ப திகதி எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (க-3)

# அமெரிக்க சிறையில் காலத்தை கழித்து வரும் யாழ். இளைஞர்!

## 4 வருடங்களாக விசாரணை இல்லை

வாஷிங்ரன், ஏப். 3

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவர் கடந்த 4 ஆண்டுகளாக எந்தவித விசாரணைகளும் இன்றி அமெரிக்கச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1997ஆம் ஆண்டு கனடாவுக்கு சட்ட விரோதமாகச் செல்ல முயன்ற தவராஜா என்பவரே அமெரிக்க குடிவரவு அதிகாரிகளினால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். கனடா செல்லும் விமானம் நியூயோர்க் விமான நிலையத்தில் தரித்த போது, வீஸா மற்றும் பாஸ்போர்ட் என்பன இல்லாத காரணத்தால் அவர்கைது செய்யப்பட்டார்.

ஆனால் தவராஜா எந்த வித குற்ற விசாரணையையும் எதிர் கொள்ளவுமில்லை; தண்டனையும் பெறவில்லை. இருப்பினும் கடந்த நான்கு வருடங்களாக அதிகாரிகள் அவரை சிறையில் அடைத்து வைத்துள்ளனர்.

இவரது வழக்கைக் கவனித்து வரும் நியூயோர்க் சட்ட அறிஞரான டெவோரா கிரெயிட்ஸர் கூறுகையில்—

வீஸா இல்லாமல் அமெரிக்கா வந்ததுதான் அவர் செய்தகுற்றம் நாட்டைவிட்டுத் தப்பியோடி வருபவரிடம் எப்படி வீஸா இருக்கும்? —என்று தெரிவித்தார்.

தவராஜா இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவருக்கு அங்கும் சிறைத்தண்டனையே கிடைக்கும் என்று அவரது உறவினர்கள் கருதுகின்றனர்.

தன்மீது கருணை காட்டி அமெரிக்காவில் தங்க உதவுமாறு தவராஜா குடிவரவு அதிகாரிகளுக்கு மனுச் செய்துள்ளார். (ம)

## ஓய்வூதியம் கொடிகாமத்தில்

தென்மராட்சி, ஏப். 3

தற்போது தென்மராட்சி கிழக்குப் பிரிவில் தங்கியுள்ள கொடிகாமம் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஏப்ரல் மாத ஓய்வூதியத்தினைக் கொடிகாமத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இதன்பிரகாரம் ஏப்ரல் 9, 11 ஆம் திகதிகளில் கொடிகாமத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் வழங்கப்படும் எனச் சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள ஓய்வூதியர்களுக்கு ஏப்ரல் 5 ஆம் திகதி தொடக்கம் நெல்லியடியில் உள்ள சங்கக் கிராமிய வங்கியில் ஏப்ரல் மாத ஓய்வூதியம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் ''புவி நடுக்க அனர்த்தங்கள்'' எனும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

புவியியற்கழகத் தலைவர் எஸ். இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரனும், கலாநிதி எஸ். ரி. பி. இராஜேஸ்வரனும் உரையாற்றவுள்ளனர். (3-6)

# போரினால் அழிந்துள்ள ஆலயங்கள் புனரமைக்கும் காலம் வந்துள்ளது

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, ஏப். 3

''யுத்தம் காரணமாக சிதைந்து அழிந்து போயுள்ள பல ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்படவேண்டிய காலம் இது. இக்காலத்தின் தேவை அறிந்து வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் ஒரு சமூகத் தேவைக்குட்பட்டது. காலத்தால் அழியாத ஒரு சிறந்த சேவை இது ஆத்ம சுத்தியுடன் இந்த நூலை அமரர் இராஜேந்திரக் குருக்களுக்கு அர்ப்பணிக்கின்றோம். இந்நூல் இந்திய மக்களால் கூட பயன்படுத்தக் கூடிய ஒன்று.'

நீர்வேலி பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் நினைவாக அண்மையில் வெளியிடப்பட்ட 'தேவி பிரதிஷ்டா விதி' நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் மேற்கண்டவாறு கூறினார்.

நீர்வேலி கந்தசுவாமிதேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தலைமை வகித்தார்.

அமரர் இராஜேந்திரக் குருக்கள் நினைவாக இந்நூலை வல்வெட்டித்துறை சிவன் தேவஸ்தானக் குருவும் சர்வதேச இந்து குருமார் ஒன்றிய வடமராட்சி கிளைத் தலைவருமான பிரம்ம ஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் வெளியிட்டார்.

கலாநிதி ப. கோபால கிருஷ்ண ஐயர் தமது வெளியீட்டுரையில் மேலும் கூறியதாவது:-

'இன்று வெளியிடப்படும் இந்நூலை உலக அந்தணர்கள் யாவரும் பயன்படுத்தக் கூடியதாக இணையத் தளத்தில் சேர்க்க வேண்டும். சர்வதேச நிலையில் இந்நூல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

எமது பாரம்பரியம், அறிவு என்பவற்றை விரிவுபடுத்துவது அவசியம். அதில் நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். சிவாச்சாரிய மரபு நீடித்து நிலைக்கும் வகையில் எதிர்கால நலன் நாடி அந்தணர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

தமிழுக்கும் சமயத்துக்கும் பணியாற்றிய பாரதியார், ஆறுமுக நாவலர்களை நினைவுகூர்ந்து விழா எடுப்பது போல இராஜேந்திரக் குருக்களுக்கும் விழா எடுக்க வேண்டும். சமூகத்துக்கு அவசியமான ஒரு நூலை வெளியிட்டு வைத்த வெளியீட்டாளர்கள் அந்தணர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளனர் —எனக் கூறினார்.

பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தமது தலைமையுரையின் போது கூறியதாவது:-

அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், மட்டக்களப்பு பூரணானந்தேஸ்வரக் குருக்கள், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரி போன்றோர் வைதிகம், ஆகமம் சம்பந்தமான நூல்களை வெளியிட்டு, அந்தணர்கள், சைவ மக்களுக்கு அறிவு புகட்டிய தோடு சந்தேகங்களையும் போக்கினர். அவர்கள் காலத்தின் பின் பல ஆகம நூல்களை சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் வெளியிட்டுள்ளார்.

ஆகம விதிகளில் சொல்லப்பட்ட படி கிரியைகள் நடைபெறவேண்டும். இன்று பரவலாக பூஜை முறைகளில் முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய சில கிரியைகள் தவறவிடப்பட்டு விடுகின்றன. தவறுதலாக அல்லது தெரியாமையால் விடப்பட்டு செய்யப்படும் கிரியைகள் எதிர்காலத்தில் இடம் பெறாதிருப்பதற்கும் சிவாச்சாரியர்கள் அவற்றைத் திருத்தமாகவும் முறைப்படியும் செய்வதற்கு இந்த நூல் அவர்களுக்கு ஒரு வழி காட்டியாக அமையும்.

தேவி மண்டப பூசைக்கான விதிநூல் எம்மிடையே இல்லாதிருந்த வேளையில் அதனை வெளியிட்டு வைப்பது எதிர்காலத்தில் கும்பாபிஷேக கிரியைகளை இலகுவாகச்செய்ய வழி செய்யும் — என்றார்.

நூலின் முதற் பிரதிகள் வை.மு. பரமசாமிக்குருக்கள், இ. சுந்தரேஸ்வரக்குருக்கள், சா. சோம சம்பசிவக்குருக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. (ம-152)

**உதய வாக்கு**

கண்ணை மறைக்கும் கண்ணீரை காலமும் பொறுமையும் காயவைக்கின்றன

## நாளை

பங்குனி 22

புதன்கிழமை

திதி: ஏகாதசி பிற்பகல்: 5.47 வரை.

ஏகாதசி விரதம்

நட்சத்திரம்: ஆயிலியம் பிற்பகல் 12.46 வரை.

சுபநேரம்: 04.40—06.10

ராகுகாலம்: 12.10—1.40

(பழைய நேரப்படி)

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### காத்தருள் செய்வாய் ஐயா!

வண்ணைப் பதியமர்ந்த வள்ளலே! சக்தி
வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரனே!
எண்ணம் தனில் நிறைந்த அப்பனே! கயாசுரனை
வதைத்(து) அவன் தோலதனைப் போர்த்தவனே!
மண்ணுஞ் சுமந்து அடியவர்க்காய் அடியும்
பெற்றவனே
முழு முதலே! முக்கண்ணனே! தொழுகின்றோம் —
உன்னடியே!
மண்ணுலகில் நாங்கள் படும் துயரம் போதுமையா
மீட்சி தந்து எங்களைக் காத்திடுவாய், ஐயனே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

(இன்று 16 ஆம் திருவிழா)

### சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து
## சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன்
# ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

கொழும்பு, ஏப் 3 சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு மிகவும் நெருக்கமான சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் முக்கிய ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இந்தச் சந்திப்பில் நோர்வேயின் முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதாகவும் —

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து அமைச்சர்களின் கருத்துக்களை ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாடுகள் அதிக அக்கறை காட்டுவதாக இந்தச் சந்திப்பில் குறிப்பிட்ட ஜனாதிபதி தீர்வு முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார். [ம]

---

முளாய்

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்
# அறிவித்தல்

**1972 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (இல. 5) பிரிவு 44 இன் கீழான**

## கணக்காய்வு
**01-05-1994 — 30-04-2000**

மேற்படி கணக்காய்வு, கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வாளர்களினால், தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. 01-05-1994 — 31-07-1996 வரையுள்ள கணக்காய்வுக் காலத்துள் சங்கத்தால் பேணப்பட்டு வந்த சில புத்தகங்கள் தற்பொழுது சங்கத்தில் இல்லாமையினால், இக்கால கட்டத்தினுள் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டவர்கள் அந்த நடவடிக்கை தொடர்பான விடயங்களை 03-04-2001 தொடக்கம் 17-04-2001 வரையுள்ள காலப் பகுதிக்குள் நேரில் சங்கத்துக்குச் சமூகமளித்தோ அல்லது கடிதம் மூலமோ அறியத் தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். வருமதி செல்மதிகள் இருப்பவர்களையும் அவற்றை உறுதிப்படுத்தி உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறான ஒத்துழைப்புக்களை வழங்கத் தவறுமிடத்து, இதனால் பிரதிகூலமான விளைவுகள் ஏற்படின் பின்னர் அது பற்றிச் செய்யப்படும் முறைப்பாடுகள் எதுவும் ஆராயப்படமாட்டாது என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி சி. கணேசு — கணக்காய்வாளர்.
மா இரத்தினசிங்கம் — தலைவர்.

(86197)

---

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவு



## செல்வன் நடேசு ஜெகதீஸ்வரன்
(மகேந்திரம்)

மலர்வு 14-02-1964
உதிர்வு 17-03-1996

எம் அன்புச் செல்வமே!
ஐந்தாண்டு கழிந்தாலும் ஆறவில்லை எம்சோகம்
இன்னும் மாறவில்லை எம்வேதனை
எம்மைக் கண்ணீரில் தவிக்கவிட்டு
கடவுளிடம் சேர்ந்த மாயம் தான் என்ன?
உங்கள் பூ முகம் காண ஏங்குகின்றோம்!
அன்பு முகம் காணாமல் வாடுகின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார்.

நவாலி அரசடி,
மானிப்பாய்.

(86166)

---

## கட்டணம் செலுத்தத் தவறியோருக்கு குடிதண்ணீர் வெட்டு

ஊர்காவற்றுறையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகத்துக்கான மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்களுக்கு குடிதண்ணீர் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இருந்து குழாய் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தக் குடிதண்ணீர் விநியோகத்திற்கு மாதாந்த கட்டணமாக 450 ரூபா மேற்படி சபையினால் அறவீடு செய்யப்பட்டு வருகிறது. (ம-16)

## 'கோழிமாலை'யுடன் பவனி வந்த திருடன்!

கோழிகளை மாலையாக அணிந்தவாறு படையினரால் ஊர்வலமாகக் கூட்டி வரப்பட்டான் திருடன்!

இச் சம்பவம் அண்மையில் ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

ஒரு வீட்டின் கூட்டில் இருந்த 25 கோழிகளைத் திருடி விற்க முற்பட்ட நபரை அப்பகுதி மக்கள் மடக்கிப்பிடித்தனர். பின்னர் அவன் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

படையினர் கோழிகளை மாலையாகத் திருடனின் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டு வீதி வீதியாக அவனைக் கூட்டிச் சென்றனர். (க-139)

## காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 3 மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என் ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் செல்கிறார்.

கைதிகளின் உறவுகளால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (க-10)

## தேங்காய்த் திருடர் எச்சரித்து விடுவிப்பு

அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்காத பகுதிகளில் வீடுகளைப் பார்வையிடச் செல்வதாகக் கூறிச் சென்று தேங்காய்களைப் பிடுங்கி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சிலரை இராணுவத்தினர் பிடித்து எச்சரித்து விடுவித்துள்ளனர்.

மீளக் குடியேற அனுமதிக்காத பகுதி மக்கள் தமது வீட்டு உடைமைகள் அபகரிக்கப்பட்டு வருவதாகச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே படையினர் திருடர்களை மடக்கிப்பிடித்திருந்தனர். (க-86)

---

## நூல் வெளியீட்டு விழா

யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசாவினால் எழுதப்பட்ட 'ஆசிரியத்தொழில்' என்ற நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை10 30மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற உள்ளது. (ம)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 — 10 — 1929



உதிர்வு 26 — 03 — 1999

## அமரர் வேலாயுதர் அன்னலட்சுமி
திதி: 03 — 04 — 2001

மனை அறத்தின் வேராக நின்று
மாண்புதந்த தெய்வமே!
இனியவளே எம் தாயே!
இனிக் காண்பது எங்கே?

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
62, செட்டித்தெரு,
நல்லூர்.

நிரந்தர முகவரி:
'பிருந்தாவனம்'
கைதடி வடக்கு,
கைதடி.

(86174)

---

# நன்றி நவில்கின்றோம்

25 03 2001 கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தில் திருநாள் திருப்பலியை நிறைவேற்றி வழிபாடு செய்வதற்கு அனுமதியளித்த

யாழ். மறைமாவட்ட ஆயர்
**பேரருள்திரு. T. சௌந்தரநாயகம்**
அவர்களுக்கும்

திருப்பலி, வழிபாடுகள் ஆகியவற்றை நிறைவேற்றிய
நெடுந்தீவு பங்குத் தந்தை
**அருள்திரு லூயிஸ் மொன்வெட்**

உதவிப் பங்குத் தந்தை
**அருள்திரு. S. ஞானேந்திரன்**
**அருள்திரு. இரா. சூசைநாதன்**
**அருள்திரு. S. அந்தோனிப்பிள்ளை**
**அருள்திரு A. அன்புராஸ்**
ஆகியோருக்கும்,

நெடுந்தீவு திருக்குடும்ப கன்னியர் சபை
**அருட்சகோதரிகள்**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
**திரு. K. சண்முகநாதன்**

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்
**திரு. J. X. செல்வநாயகம்**

அக்குவாட்டிப் படகு உரிமையாளர்
**திரு. K. கந்தையா**

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத் தலைவர்
**திரு நா சங்கரப்பிள்ளை**

பொது முகாமையாளர்
**திரு. K கோபாலபிள்ளை**

**பொதுச்சபை உறுப்பினர்கள், ஊழியர், பணியாளர்கள்**

நெடுந்தீவு பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்
**திரு. E. அருந்தவசீலன்**

பிரதேச சபை உறுப்பினர்
**S. றெஜி பேக்மன்ஸ்**

கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்
**K. P. அமிர்தநாதர்**

உப தலைவர்
**திரு A. சிங்கராயர்**

ஆகியோருக்கும் மற்றும் அன்புக் கரம் நீட்டி உதவிகள் செய்த அனைவருக்கும் எம் நன்றிகள்.

A. V. அரியநாயகம்
J. P. U. M.
தலைவர்,
பிரதேச சபை, நெடுந்தீவு.

(சி/15986)

குடாநாட்டு வர்த்தக நிலையங்களால்

# தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகள் ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை

## தொழில் திணைக்கள அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.3

குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள், லீவுகள் என்பவற்றை ஒழுங்காக வழங்குவதில்லை என யாழ்ப்பாணத் தொழில திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் வாரத்தில் ஒன்றரை நாள் லீவு வழங்கப்பட வேண்டும் அல்லது அந்த ஒன்றரை நாள்களுக்கும் உரிய மேலதிகக் கொடுப்பனவு (ஓவர் ரைம்) வழங்கப்பட வேண்டும் என்ற தொழில் சட்டத்துக்கு அமைவாக பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் இயங்குவதில்லை எனவும் -

அவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்தத் தொழிலாளியும் துணிந்து வந்து தொழில் திணைக்களத்திடமோ அல்லது தொழிற சங்கங்களிடமோ முறையிடுவது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் தொழில் சட்டங்கள், தொழிலாளர் நலன்கள் என்பவற்றைச சிறந்த முறையில் பேணமுடியாமல் இருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாகத் தொழில் நீதிமன்றம் இல்லாமலிருப்பதும் இதற்கு ஒரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதற்கு தொழில் திணைக்களம் இயன்றளவு முயற்சிகள் மேற்கொண்டுள்ள போதிலும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பின்மையால் சில சந்தர்ப்பங்களில் அம்முயற்சிகள் கைகூடாமல் விடுவதாகவும் யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவித் தொழில் ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் தெரிவித்தார். (க-4)

## மன்னார் ஆயரின் நடவடிக்கைக்கு

# நீதி சமாதான ஆணைக்குழு தார்மீக ஆதரவை வழங்கும்

தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்டுவரும் கெடுபிடிகளைக் குறைக்கக் கூடிய வகையில் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்ற கருத்தை வலிறுத்தி மன்னாரில் தாங்கள் நடத்தத் தீர்மானித்துள்ள ஆர்ப்பாட்டத்திற்கு எமது தார்மீக ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு மன்னார் ஆயர் இராஜப்பு யோசப்புக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கவலை தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் மன்னாரில் இரு அப்பாவிப் பெண்மணிகளுக்கெதிராக அரச படையினரால் இழைக்கப்பட்ட மிலெச்சத்தனமான கொடூரத்தைப் பற்றி பத்திரிகை மூலம் படித்தறிந்தோம்.

பல தசாப்தங்களாக இத்தகைய மனித உரிமை மீறல்கள், அரச பயங்கரவாதத்தின் வெளிப்பாடுகளாக இடம் பெற்று வருகின்றபோதிலும், இவற்றை நிறுத்துவதற்கு வலிமையான மனத்தையோ செயற்பாட்டையோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் காணமுடியவில்லை.

இங்கு யாழ்ப்பாணத்தில் சமாதானத்தை வேண்டி பிரார்த்தனைப் பேரணி நடத்தவோ, ஒன்றுதிரண்டு கூட்டாக சாத்வீக முறையில் எமது அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கோ உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கண்டித்து தாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் எமது தார்மீக ஆதரவை தெரிவிக்கின்றோம். நீதி, சமாதானம் ஆகியவற்றைப் பெற்றுத்தரும் வெற்றிகரமான செயல்களாக தங்கள் செயற்பாடுகள் அமைய இறையாசி வேண்டி நிற்கின்றோம் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## சனசமூக நிலைய கட்டடத்திற்கு அடிக்கல்

வலி.வடக்கு.ஏப்.3

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய புதிய கட்டடத்திற்கான அத்திவாரக்கல் அண்மையில் நட்டுவைக்கப்பட்டது.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் கலந்து கொண்டு அத்திவாரக் கல்லை நட்டு வைத்தார். (க-86)

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO)
உலக சுகாதார தினம் - 2001
ஏப்ரல் 7
தொனிப்பொருள் :- உளநலம்
உளநலம் குன்றியோரை
பராமரிக்கத் திடங்கொள்வோம்
DARE TO CARE
TPO

# பாவநாட்டத்தை விட்டு விலகி வாழ முயற்சி செய்வோம்

தவக்கால சிந்தனை

35 ஆம் நாள்

"நோயற்றவருக்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை". நேர்மையானவர்களை அல்ல, பாவிகளையே மனம்மாற அழைகக வந்தேன். (லூக் : 5-31-32) வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் யேசு வாழ்ந்த வாழ்க்கையையும் சற்று ஒப்பிட்டுப்பார்ப்போம்.

நாமோ ஒருவர் ஏதாவது தவறு செய்தால் அவர்களைப் பாவிகள் என்று பட்டம் சூட்டி அவர்களின் மானத்தைச் சந்திக்கு இழுக்கவில்லையா? மாறாக எம்மை நீதிமான்கள் எனக் கூறிக்கொண்டு பெருமிதம் அடைகிறோம். இதுவா கிறிஸ்தவ வாழ்வு.

இன்றைய உலகில் குடும்பங்களில் எத்தனையோவிதமான பாவநாட்டங்களில் உலகம் மூழ்கியிருக்கிறது. விபசாரம், களவு, பொய், ஆணவம் போன்ற தீய பழக்கங்களில் எரிந்து சாம்பலாகிக் கொண்டே போகிறது. இவைகளை முற்றாக வேரோடு பிடுங்கிவிட்டு யேசுவைப் பின் தொடர்ந்தால் அவர் எம்மை அன்பு செய்து ஏற்றுக் கொள்வார். யேசுவின் காலத்திலும் இவ்வாறு நடந்தது.

விபசாரத்தில் பிடிபட்டவளைக் கல்லால் எறிந்து கொல்லும்படி கூறினார்கள். உங்களுள் பாவம் இல்லாதவன் முதலில் கல்லை எறியும்படி யேசு கூறியபோது ஒருவரையுமே காணவில்லை.

இன்று நாமோ எத்தனை மனிதர் மேல் அவன் பாவி, அவள் பாவி என்று அநியாயமாக கல்லெறிந்திருக்கிறோம். இறைவன் முன்னிலையில் எம்மைத் தாழ்த்தி யேசு விரும்பியபடி பாவநாட்டத்தை விட்டு விலகி வாழ முயற்சி செய்வோம்.

செல்வி கௌரி செல்வராசா
அச்சுவேலி.

# பிறவிக் கடல் கடந்து முத்திபெற தெப்பமாக அமைவது குருபக்தியே!

**சிவயோக சுவாமிகளின் 36 ஆவது குருபூசையை ஒட்டிய நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் யாழ்.சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து நடைபெறும் அந்த நிகழ்வுகளை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது.**

முத்தி தரும் திருவடி ஞானம் குருவருளாலேயே பெறற்பாலது. திருவருள் குருவடிவாக எழுந்தருளி ஆன்மாவோடு செம்பிற்களிம்பு போல் சேர்ந்திருக்கும் ஆணவ மலத்தை நீக்கினாலன்றி அது நீங்குமாறில்லை என்பது சைவநூற்றுணிவு. இங்ஙனம் மலத்தை நீக்க மானிடச் சட்டை தாங்கி எழுந்தருளும் குருவை, இனம் கண்டு கொள்பவன் யாரெனில் பக்குவம் அடைந்த சிஷ்யனே. குருவைத் திருவருளின் மானிடப்போர்வை என்று அறிவானன்றி ஆசிரியரில் மறைந்து நிற்கும் திருவருளையறியாதார், அவரை மனிதராகவே காண்பர் என்பதாம், குருவை அறிந்து, அவரின் பெருமையுணர்ந்து குருவழிபாடு செய்வோரே மேநிலை யெய்துவர். குரு ஒருவரே அன்றி பலரல்லர். இவ்வுண்மையை உணர்ந்து குரு பக்தி, குருபூசை வழிபாடுகள் செய்வது சிஷ்யரது பெருங்கடனாகும். குருபக்தி - குருவுக்குச் செய்

**இரத்தினசபாபதி மணிகண்டன்**

யும் பணிகள் அறக்குறைவை நிறைவாக்கும். பிறவியென்னும் பெருங்கடலைக் கடத்தற்கும் பெருந்தெப்பமாகும். தவத்தால் தீர்த்தத்தால் சாந்தித்தால் நீங்காத பாவங்களையும் குருபக்தி நீக்கிவிடும். ஆகவே சிஷ்யர்களாக பக்தர்களாய் உள்ளார்க்கும், குருபூசையே சாலச்சிறந்த பூசையாம் என்பது தேற்றம். சிவயோக மூர்த்தமே யோக சுவாமிகள்.

*"சற்குருதரிசனம் சகல பாக்கிய சுகம், தாளிணை பணி நீ தினம்"* (நற்சிந்தனை)

*"குருபக்தியே பெரும்பேறு கொண்டாடிக் கொண்டாடி ஆறு"* (நற்சிந்தனை)

### இரு அருள் வேடங்கள்

ஒருவரும் காணவொண்ணா மெய்ப்பொருள் செல்லப்பர், சிவயோகர் என்னும் இரு அருள் வேடங்களாகத் தோன்றி இலங்கை நகரிலே நாடகமளித்தது. செல்லப்ப மூர்த்தம் ஞானதேசிகனாய் நடனமிட்டது. சிவயோக மூர்த்தன் சீடனாகவும், சற்குருவாகவும் நாடகமளித்தது. நல்லூர் தேரடி ஒரு புனிதமான இடமாகும். சிவயோகசுவாமிகள் தம் குருவையினிது கண்டு ஆட்கொள்ளப்பட்ட இடம் இதுவே. செல்லப்ப தேசிகர் ஓதென்ற சிந்தனையராய் வந்த சிவயோகருக்கு வாழ்வையளிக்கிறார். "இருந்து பார்", "ஏது மொன்றறநில்", "நாமே நாம்", "சுட்டிறந்து நில்", "ஆரடா நீ?", "தேரடாவுள் தீரடா பற்று பாரடாவெளியில்" என்று பதறிப் போகும் வண்ணம் பரிபாசையில் பேசுகின்றார்.

"ஒரு பொல்லாப்பும் இல்லை", "முழுதுமுண்மை", "எப்பவோ முடிந்த காரியம்", "நாமறியோம்" என்னும் மகா வாக்கியங்களை மந்திர ரூபமாக மொழிகின்றார்.

*"...குன்றுபோல் வந்தானொருவன் வளஞ்*
*சேரும் நல்லூரில்*
*தந்தானருள் எனக்குத்தான்"*
(நற்சிந்தனை)



சிவயோக சுவாமிகள் தம்மையண்டி வருவோரின் சாதி, குலம், பிறப்பு என்றிவற்றைப் பார்க்க மாட்டார். ஒழுக்கம், பண்பாடு இவைகளில் கண்ணாயிருப்பார். பக்தி வலையிற்படுவார். கடவுள் ஒருவரேயெனவும், செயலின் நிமித்தம் வெவ்வேறு பெயர்கள் கற்பிக்கப்படுகின்றன எனவும் விளக்கினார். சிவன், விஷ்ணு, முருகன் முதலிய கடவுளர் மீதெல்லாம் தோத்திரப்பாடல்களைப் பாடியுள்ளார். அவர் "வேதாந்த சித்தாந்தம் வேறெனக் காணோம் மோன சமரசமே சுவாமிகளின் நிலை. வேதாந்தம், சித்தாந்தம் ஒன்றிலும் அவர் அகப்படவில்லை. "எச்சமயத்தையும்" ஏளனம் செய்யோம் சகல சமயத்துக்கும் சம்மதம் கொடுப்போம்" உலகத்தில் வேறு சமயத்தினருள்ளனர். அவர்கள் தத்தம் மறைகாட்டும் வழியிற் செல்வர். சுவாமிகள் எச்சமயத்தையும் ஏளனம் செய்யமாட்டார். சைவ ஆசாரத்தைப் பேணுவதில் சுவாமிகள் மிகவும் கண்டிப்புடையவராக இருந்தார். சைவக் கோயில்களிலும், சைவ அறச்சாலைகளிலும் பூசை, திருவிழா, திருமுறைகள், புராணபடலங்கள் முதலியவற்றைப் பக்தியுடனும், நம்பிக்கையுடனும் முறைப்படியும் செய்தால் உலகிற்கு நன்மை விளையும் என வழி நடத்தியும் வந்தார். மனித குடும்பத்தின் உயர்வு, தாழ்வு, பெரியார், சிறியார், கறுப்பு, வெள்ளை என்னும் இயல்புகள் பேதப்படுத்துவதில்லை. இதுவே சைவத்தின் தனி நிலையென்பார். நாங்கள் எல்லாம் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் என்பார். அன்பர்களைக் காணுந்தோறும் மற்றைய அன்பர்களின் நலன் விசாரிப்பார். எல்லோரும் நல்லாயிருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்குமாறு சொல்வார். "உனக்குமேல் ஒருவருமில்லை; கீழுமொருவருமில்லை" என உணர்த்துவா. திரிலோகமும் சொந்த நாடு என்பார்.

### கடவுளுக்கு உகந்த உள்ளம்

ஒருவன் எந்தவகை உள்ளம் படைத்திருக்கிறான் என்பதை உலகத்தவர் நோக்குவதில்லை. ஆனால் கடவுளோ ஒருவருடைய உள்ளத்தைத் தான் பார்க்கிறார். தூய தெளிந்த தியாகம் படைத்த உள்ளம் கடவுளுக்கு உகந்த உள்ளமாகிறதென்பார். செல்வத்தனுக்கும், ஏழைக்கும், கற்றவனுக்கும், கல்லாதவனுக்கும் இன்பதுன்பமுண்டு. இன்பத்தில் மூழ்கிப் போவதும், துன்பத்தில் துயரடைவதும் உலகத்தவருடைய போக்கு ஆகும். பக்தனோ இன்பதுன்பங்களைச் சமனாகப் பாவித்து மனத்தெளிவுடன் இருக்கிறான். பக்தனுடைய உள்ளத்தில் காமத்துக்கு இடமில்லை. ஆகையால அவனுக்குப் பயமில்லை. அச்சத்தை வெல்லுகிறவனுக்கு கலங்கா உள்ளம் அமைகின்றதெனப் புகட்டுவார். இந்திரிய சுகத்தைத் துச்சம் என ஒதுக்கித் தள்ளியவனுக்கு, உலகத்திலிருந்து, எப்பொருளும் தேவைப்படுவதில்லை. பக்தனுக்கு கடவுள் ஒருவர்தான் வேண்டும். கடவுளை வேண்டுபவர் திருப்தர் ஆகிறார். காமிய கர்மங்களைத் துறந்து தெய்வத்துக்காகத் தொண்டு புரியும் பேரியல்பு படைத்தவன் பக்தன். பக்தன் எல்லாரிடத்தும் ஈசனைக் காண்கின்றான். ஆகவே அவன் எல்லாரையும் ஈஸ்வர சொருபமாகக் கருதித் தொண்டு புரிகின்றான். அவன் காட்சியில் பகைவர்களுமில்லை. நண்பர்களுமல்லை என்றும் சொல்லுவார்.

### சுவாமிகள் அருளிய நற்சிந்தனை

சுவாமிகளால் அருளப்பட்ட கற்பக விருட்சமாகிய 'நற்சிந்தனை' என்னும் அரிய திருநூலில் எமது சமய குரவரும், சந்தான குரவரும், கடவுள ஆன்மா, உலகம் பற்றிய சுத்தாத்வித உண்மையை உணர்த்தினார்கள். எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்புமில்லை, நாமறியோம், முழுதுமுண்மை என்கின்ற எளிமை வாய்ந்த நான்கு மந்திரங்களான - மகா வாக்கியங்களிலும் சுவாமிகளின் தத்துவ ஞானம் வியக்கத்தக்க வகையில் பொதிந்து கிடக்கின்றது. எங்கள் குருநாதனால் 'நற்சிந்தனை' எனும் நல்லமிர்தத்தை அருந்தி, சிந்தித்து தியானத்தில் மூழ்க யாழ்ப்பாணத்தில சிவ தொண்டன் நிலையம் அமைக்கப் பெற்றது. கிழக்கிலங்கையின் செங்கலடியில், சுவாமிகளின் திருவெண்ணங்கட்கமைய அவர் திருவருளினாலே திருவடிக் கலப்பின் பின், அவர்களின் உத்தம சீடமூர்த்தங்களினால், சிவ தொண்டன் நிலையம் அமைத்து திருவருள் பாலித்து வருகின்றது. நற்சிந்தனை என்னும் நல்லமுதமும், பற்பல இனிய கட்டுரைகளும் கொண்டு, செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடாய் அடியவர்கள் மனைக்கு உவகையுடன் சென்றடைய 'சிவ தொண்டன்' மாத மலரையும் சுவாமிகள் தோற்றுவித்து இன்று அறுபத்தைந்து வயதுடன் மிளிர்கின்றது. ☆

## குருவாய் அருளும் சிவயோக சுவாமிகள்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பெற்றுக்கொள்க

30-03-2001 அன்று கொழும்பிலிருந்து இரண்டாவது விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்த பயணி ஒருவரால் கை தவறவிடப்பட்ட உடுப்புப் பார்சல் ஒன்று க.கனகராசா, ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு என்னும் முகவரியில் உள்ளது. தவறவிட்டவர் ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (86175)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய மணப்பெண்ணுக்கு (ரோகிணி நட்சத்திரம், லக்கின பாவம் 10) சுய தொழில் புரியும் மணமகன் உடன் தேவை. தொடர்பு:- தா.நிர்மல மூர்த்தி, "திருவெள்ளாறை திருமண சேவை" டச்சு வீதி, வட்டு.கிழக்கு, சித்தன்கேணி. (**Forut** அருகில்) (86150)

## வீடு விற்பனை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இருக்கும் 179/3 இலக்கங் கொண்ட ஏறக்குறைய நிலப்பரப்பு 2 1/2யும், புதிய கல்வீடும் விற்பனைக்குண்டு. காலை 8.30 மணிக்கும் 11.30 மணிககும் இடையில் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (86192)

## TYPE WRITERS

நல்ல நிலையில் உள்ள தமிழ், ஆங்கில TYPE WRITERS விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (86191)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியையும் (யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள) மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் வீதியில் யாழ்ப்பாண பிரதம தபாறகந்தோர் முன்பாக கடைகள் கட்டுவதற்கு வசதியான காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு: குமார், யாழ்ப்பாணம் என்பவரிடம் தொடர்பு கொள்ளவும். **T.P 2917** (86082)

அளவெட்டி வடக்கு கணேஸ்வரத்திலுள்ள நெடுங்கணி என்று அழைக்கப்படும்13 1/2 பரப்பு கொண்ட கிணற்றுடன் கூடிய வீடுகட்ட உகந்த காணி (கருகப்புலம் அமரிக்கன் மிசன் பாடசாலைக்கு அண்மையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.கதிர்காமலிங்கம், நீதிமன்ற வீதி, மல்லாகம். (86193)

## கடாக்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன, வளர்ப்புக்கு உகந்த இரண்டு கடாக்குட்டிகள் விற்பனைக்குண்டு. 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (86178)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **(AUKUR) HERO MAJESTIC** மோட்டார் சைக்கிள், வூல்சிலி மெசின் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சோ.சந்திரசேகரன், மயிலணி சிவன் கோயில், சுன்னாகம். (86188)

நற்சிந்தனை, திருவாசகம், பகவத கீதை, பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், திருவருட்பா போன்ற இன்னும் பல தெய்வீக நூல்கள் இருக்கின்றன. தொடர்பு:- 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். நேரம்: மாலை 2.00 - 6.00 வரை. (86170)

## புறொயிலர் குஞ்சுகள்

**BAIRAHA FARMS** புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. தொடர்பு:- வை.சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது மின்சார நிலைய வீதி, (கிளின் சொட் அருகில்) பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (86146)

## 100 பேருக்கு விரைவில் தொழிற்பயிற்சி

வலி.தென்மேற்கு,ஏப்.3

சண்டிலிப்பாய் - வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடையாத 100 பேருக்கு விரைவில் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை பிரதேச செயலர் நா.வேதநாயகன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

கட்டுமானம், கடற்றொழில்நுட்பம், உணவுத்தொழில்நுட்பம், பழவகை பதனிடல், கடலுணவு பதனிடல், மரத்தொழில்நுட்பம் ஆகிய 5 பயிற்சி நெறிகளில் 18-35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

## மண் எண்ணெய் கடைகளில் விற்ற 'ஜூஸ்' பறிமுதல்

பண்டத்தரிப்புப் பகுதியில் அசிட் மற்றும் மண்எண்ணெய்க் கடைகளில் 'ஜூஸ்' வகைகள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டு, அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராஜதுரை மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே 'ஜூஸ்' வகைகள் பறிமுதலாயின. அத்துடன் அந்தக் கடை உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். (க-185)

## கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் குருபூசை

அரியாலை,ஏப்.3

சிவயோக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை கொழும்புத்துறையில் உள்ள சுவாமிகளின் ஆசிரமத்தில் விசேட பூசை வழிபாடுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 9.00 மணிக்கு ஆசிரமத்தில் விசேட அபிஷேகத்துடன் பூசைகள் நடைபெறும். தொடர்ந்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் சுவாமிகளின் குரு பூசை வழிபாட்டு நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இந்த நிகழ்ச்சிகளின் பின்னர் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நண்பகல் மகேசுர பூசை நடைபெறும்.

இந்தக் குருபூசை வைபவத்தில் சகல மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-17)

## சுன்னாகம் கிராம அபிவிருத்தி சங்கம் கோரிக்கை

சுன்னாகம் மக்களின் நீண்டகால தேவைகளான பொது விளையாட்டு மைதானம், கலாசார மண்டபம் ஆகியவற்றை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு சுன்னாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சுன்னாகம் பிரதேச சபைத் தலைவரிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-152)

---

யா/ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலய அதிபர் மேன்மேலும் உயர

## வாழ்த்துக்கள்



**நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை** B.A. (Cey.)
Sp.Trd. S.L.P.S.2:I, Co.op.E.C.E (Polgola).

ஆனைப் பந்தி மெதடிஸ்த மிஷன் பள்ளியில்
ஆளுமை மிக்க அதிபராய் அரும்பணியாற்றி
அயராது உழைக்கும் சோமேஸ்வரபிள்ளை நல்லானுக்கு
அதிபர் தரம் 2:1 பதவியில் உயர்வு பெற்றமையிட்டு
அளவில்லா ஆனந்தம் மேலிட பாராட்டுக் கூறுவதுடன் மேன்மேலும்
பதவியுயர்வுகள் பலபெற்று பல்லாண்டு சிறப்புடன்
பாரினில் வாழ வாழ்த்துகின்றோம்.

பா.அபி.சங்கம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
(86187)

---

## விற்பனைக்கு

**COMPUTER;**

**PENTIUM III 800MHZ Computers**

PRINTER
MONITER
UPS

மற்றும் கணனி உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

**KINGSTON ELECTRONICS**
**No.37, CLOCK TOWER RD, JAFFNA.**
**T.P. - 021 - 3140** (86183)

---

## கண்ணீர் அஞ்சலி

சமூகசேவையாளரும் உதயன் நாளிதழ்
அலுவலகச் செய்தியாளருமான
**திரு.என்.கே.துரைசிங்கம்**
அவர்களின் அன்புத் தந்தையார்
கைதடி மேற்கைச் சேர்ந்த

**நாகன் கொத்தன்**

அவர்கள் காலமாகியதையிட்டுத் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- **நண்பர்கள்**
*கைதடி.*

(86176)

---

**இளவாலை**

## புனித வியாகுல அன்னை திருவிழா

02-04-2001 திங்கள் தொடக்கம் திரிதின வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

05-04-2001 வியாழன் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலை, திருப்பலியுடன் திருச்சொரூப பவனியும்,

06-04-2001 வெள்ளி காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 5.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதைத் தியானமும் இடம்பெறும்.

பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்.

(86189)

---

## நெஞ்சைவிட்டகலாத ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 14 - 10 - 1956



விண்ணில் 14 - 03 - 2000

**திருமதி மகாலட்சுமி மகேஸ்வரன்**
**B.A.Dip.inEd.**
(ஆசிரியை, யா/தெல்லிப்பழை கட்டுவன்புலம் ம.வி)

**திதி: 03.04.2001**

பெண்மையின் இருப்பிடமாய்
ஞானத்தின் பிறப்பிடமாய்
பொறுமையின் சிகரமாய்
பெருமையாய் வாழ்ந்து
நீர் விண்ணகம் சென்று
ஓராண்டு ஆனதுவோ?

*சோடாக்கம்பனி ஒழுங்கை,*
*மல்லாகம்.*

- **கணவர், பிள்ளைகள், சகோதரர்கள், குடும்பத்தினர்.**

(86186)

---

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு நாகராசா

(உரிமையாளர், இன்பதாஸ் பந்தல் சேவை, இன்பதாஸ் ஸ்ரோஸ்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நாகராசா நேற்று (2.04.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இன்பதாஸ் பந்தல் சேவை உரிமையாளரும், இன்பதாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் காலஞ்சென்ற முருகேசு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற சுப்பையா - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நஞ்சன் (ஜேர்மனி), வரததாஸ் (ஜேர்மனி), இன்பதாஸ் ஆகியோரின் இனிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.4.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
**திருமதி நா.பரமேஸ்வரி** (மனைவி),
**நா.இன்பதாஸ** (மகன்) (86177)

## திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள்

காரைநகர், மருதடியைப் பிறப்பிடமாகவும், பெருங்குளம் பிள்ளையார் கோயில் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், தற்போது கந்தர்மடத்தில் வசித்துவந்தவருமாகிய திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள் கடந்த (31.03.2001) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), செல்லம்மாவின் இளைய மகளும், மார்க்கண்டுவின் (முகாமையாளர், கரன் ஜுவலலர்ஸ், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், வைகுந்தன் (2001 கணிதப்பிரிவு, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), உமாபாலன் (2002 கணிதப்பிரிவு, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - சிவகாமியின் மருமகளும், திருமதி ப.ஞானாம்பிகை (ஹற்றன்), திருமதி ஜெ.புனிதவதி (கொழும்பு), திருமதி த.மங்கையர்க்கரசி (கொழும்பு), சி.திருஞானசம்பந்தன் (அமெரிக்கா), காலஞ்சென்ற சி.சோமாஸ் கந்தன் (C.G.R), சி.சச்சிதானந்தன் (கனடா), சி.திருநாவுக்கரசு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரஞ்சோதி, ஜெகதீசன், தவலிங்கம், திருமதி தி.நிர்மலாதேவி, திருமதி சோ.ஜெகதீஸ்வரி, திருமதி ச.ஞானகலா, திருமதி தி.மலர் மற்றும் திருமதி பஞ்சாட்சரம் கனகம்மா (அருள் முருகன ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்), திருமதி கந்தசாமி மகேஸ் வரி (ஸ்ரீ வள்ளி கபே, சாவகச்சேரி), சி.அரியரட்ணம் (வெற்றிலைக்கடை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2001) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரது 209, பலாலி வீதி, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**சி.மார்க்கண்டு** (கணவர்)
(ஹரன் ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்.)

தற்காலிக முகவரி:
*இல. 209, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.*

நிரந்தர முகவரி:
*பெருங்குளம் பிள்ளையார் கோயில் வீதி,*
*சாவகச்சேரி.*
(86190)

தமிழர் தாயகம் தொடர்பாக

# அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்கு வடமாகாண ஆசிரிய சங்கம் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் தொடர்பாக, வெளியிட்ட கருத்துக்கு விசனம் தெரிவித்து வடமாகாண ஆசிரியர் சங்க யாழ்மாவட்டக் கிளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இருந்தே, இலங்கையர் என்ற தேசபக்தி உணர்வுடன் செயற்பட்டவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பு என்ற முறையிலும், 1978ஆம் ஆண்டில் காலியில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டிலேயே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டதும் சகல இன மக்களையும் கொண்டதுமான ஓர் அமைப்பின் கிளை என்ற முறையிலும் இது தொடர்பான கருத்து வெளியிடவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு என்று கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் வன்முறை மீது காதல் கொண்டோ, வெறும் வீரசாகசச் செயலுக்கோ போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தூதுவர் குறிப்பிட்டதைப்போல தாம் சமத்துவத்துடனும், மதிப்புடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு வகைசெய்யும் தீர்வையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை ஒரு பல்லின, பலமத, பல கலாசார நாடு என்பதை ஏற்று சகல தரப்பினரும் இணைந்து ஒரு சுதந்திர நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற எண்ணத்துடனேயே தமிழ்மக்கள் சுதந்திரம் தொடர்பான செயற்பாடுகளில் கரம் சேர்த்துச் செயற்பட்டுள்ளனர். 1930களில் அமரர் பண்டாரநாயக்கவினால் சமஷ்டிக் கோரிக்கை முன்வைககப்பட்டபோது அது தமிழர்களின் கவனத்தைப் பெறவில்லை. அந்த அளவிற்கு பெரும்பான்மை மக்களின் மீது நம்பிக்கை கொண்டோராய் அவர்கள் இருந்தனர்.

இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற அமர்விலேயே நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருநத மலையக மக்களின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டபோது கூட, பாரிய எதிர்ப்பைக் காட்டக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. திட்டமிட்ட குடியேற்றங்களினால தமது சமுக வாழ்க்கை பாதிககப்பட்ட போதெல்லாம் சகிப்புத்தன்மையையே பேணிவந்துள்ளனர்.

இன்று கூட அரச எந்திரத்தின் பேரினவாத வெறி தணிந்துவிட்டது. என்று கூறமுடியாது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவிற்கு ஏனும் நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்ட அரசியல் முன்மொழிவுகள் "கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை"யாகத் திருத்தப்பட்டதும் அதனைக்கூட நிறை வேற்றமுடியாத நாடாளுமன்றமும் இதற்குச் சான்று பகரும்.

இந்த யதார்த்தம் புரியப்பட்டு நடுநிலையாக அணுகப்படாத தீர்வு எதுவும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் என்று கூறமுடியாது.(க-3)

பல்கலைக்கழகத்தில் நாளைமுதல்

# யாழ்.விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த அமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 9ஆவது வருடாந்த அமர்வுகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறுகின்றன. யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் இந்த அமர்வுகளின் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

நாளைய நிகழ்வுகள் சங்கத் தலைவர் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நூலக மண்டபத்தில் நடைபெறுகின்றன.

பகல் 10 மணிக்கு "21ஆம் நூற்றாண்டில் யாழ்மாவட்டம் எதிர்கொள்ளும் அபிவிருத்திச் சவால்கள்" என்ற தொனிப்பொருளில் நிகழும், ஆய்வுக் கருத்தரங்கு பேராசிரியை செல்வி வி.அரசரத்தினம், கலாநிதி எஸ்.மகேசன், எஸ்.இராஜதுரை, பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம், பொறியியலாளர் கே.பூரணசந்திரன், எம்.நடராஜசுந்தரம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஏ.பஞ்சலிங்கம் "பாடசாலை மட்டக் கணிப்பீடு - ஒரு நோக்கு" என்ற பொருளிலும், 2.15 மணிக்கு இலங்கையின் "ஆதி வரலாறு" என்ற பொருளில் பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலமும் உரை நிகழ்த்துகிறார்கள். பிற்பகல் 3.15 மணிக்கு பேராசிரியர் ஏ.நவரட்ணராஜா "ஆய்வகத் தயாரிப்பு உரமூட்டல்" என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

வியாழக்கிழமை நடைபெறும் 2ஆம் நாள் நிகழ்வில் முற்பகல் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. பிற்பகல் 2 மணிக்கு "மருத்துவ முன்னேற்றங்களும், அவை தொடர்பான ஆக்கக் கூறுகளும்" என்ற தலைப்பில் டாக்டர் கே.சிவநேசனின் உரை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து "குடற்புண் நோய்கள்" குறித்து டாக்டர் டி.சி.அம்பலவாணர் உரையாற்றுவார். பிற்பகல் 3.45 மணிக்கு "பண்டைத் தமிழரின் ஒழுக்க, சமுகவியற் கோட்பாடுகள்" என்ற பொருளில் வித்துவான் கே.சொக்கலிங்கம் உரையாற்றுவார்.

இறுதி நாளான 6ஆம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு "யாழ்.பொருளாதாரத்தின் போக்குகளும் வாய்ப்புகளும் என்ற பொருளில் வி.பி.சின்னத்தம்பியும், அதனையடுத்து "விவசாயப் பீடைகள்" தொடர்பாக ஜீ.மிகுந்தனும் உரை நிகழ்த்துவார்கள். பிற்பகல் 2 மணிக்கு டாக்டர் என்.சிவராஜா "வடக்கு - கிழக்கு சுகாதார நலம் பேணலின் எதிர்கால விளைவுகள்" என்ற பொருளில் உரை நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெறும். (க-ஒ)

# மன்னார் வல்லுறவுச் சம்பவம்; அடையாள அணிவகுப்பு நாளை

வவுனியா,ஏப்.03

மன்னாரில் கைதுசெய்யப்பட்ட இரு தமிழ்ப் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் தொடர்புடையவர்களின் அடையாள அணிவகுப்பு நாளை புதன்கிழமை நடைபெற உள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

சம்பந்தப்பட்ட இரு பெண்களும் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதற்கான உறுதியான ஆதாரங்கள் இருப்பதாக அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய வவுனியா சட்ட வைத்திய அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர்களது மார்புப்பகுதி உட்படப் பல அவயவங்களில் பற்களால் கடித்துக் குதறியதற்கான காயங்கள், காணப்படுவதாகவும், உடலின் பல இடங்களிலும் அடி காயங்கள் காணப்படுவதாகவும் அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இந்த இரு பெண்களும் 30ஆம் திகதியே மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் பல தடயங்கள் அழிந்திருக்கலாம். சம்பவம் இடம்பெற்ற உடனேயே மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தால் பல துல்லியமான சான்றுகளைப் பெற்றிருக்க முடியும் என்று மாவட்ட வைத்திய அதிகாரி கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (ம)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி

அச்சுவேலி,ஏப்.3

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் விமலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக இந்த வைத்தியசாலைக்கு எம்.பி.பி.எஸ். பட்டதாரி வைத்தியர் இல்லாத குறை நீக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர் விமலேந்திரன் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (க-11)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளதாக சங்கச் செயலாளர் ச.பிறேம்குமார் அறிவித்துள்ளார். (க-4)


## நலிவுற்றோர் விவரம் திரட்டல்

ஊர்காவற்றுறை,ஏப்.3

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து, மீளக் குடியேறிய மற்றும் இடம்பெயர்வு ஏற்படாத பகுதிகளில் வாழும், நலிவுற்றோர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் மிகவும் நலிவுற்றோருக்கு உதவும் வகையிலான செயற்றிட்டத்தின் கீழ் இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக அநாதரவான சிறுவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள, பெற்றோரை இழந்த பாதுகாவலர் உடைய சிறுவர்கள், தனியாக வாழும் முதியோர்கள், வலது குறைந்தோர், அவயவங்களை இழந்தோர் போன்றோரது விவரங்கள் தற்பொழுது கிராமசேவை அலுவலர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு வருவதாக, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.குமாரசாமி சர்மா தெரிவித்தார். (க-16)



'கியூடெக்' நிறுவனத்தின் ஆதரவில் மருதனார்மடம் ஆச்சிரமத்தில் கடந்த மாதம் மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெற்றன. *இந்த நிகழ்வில் முந்நூறுக்கும் மேற்பட்ட யுவதிகள் கலந்துகொண்டனர்.*

நிகழ்வில் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை.சி.கியு.ஜெயக்குமார் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் சிறப்புரை ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படத்தில் காணலாம். (ம-6)

மீன் வியாபாரிகளைப் போன்று

# குருநகரில் 'ஹோரன்' ஒலித்தவாறு ரோந்து செல்லும் இராணுவத்தினர்

குருநகர்,ஏப்.03

குருநகர்ப் பகுதியில் இராணுவத்தினர் இரவு நேரங்களில் புதுமையான ரோந்து நடவடிக்கையை தற்போது மேற்கொணடு வருகிறார்கள்.

இரவு நேரத்தில் ஊரடங்கு நேரம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்பாக குருநகர் வீதிகளில் சைக்கிள்களில் ரோந்து வரும் இராணுவத்தினர் மீன் வியாபாரிகள் பாவிப்பது போன்ற 'ஹோரன்'களை "பாம் பாம்"என ஒலித்துச் செல்கின்றனர்.

இந்தச் சத்தத்தைக் கேட்டதும் பொதுமக்கள் தமது வீடுகளினுள் சென்றுவிடுகின்றனர்

அதேவேளை இளைஞர்கள், யுவதிகள் விரைந்து ஓடிச் செல்ல முற்படுகையில், இராணுவத்தினர் ஒழுங்கைகள் ஊடாகத் துரத்திச் செல்கின்றனர் என்றும் குருநகர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிலவேளைகளில் இராணுவத்தினர் இரவு ரோந்து வரும்போது இளவயதுடையவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டு, மறுநாள் முகாமுக்கு வருமாறு கேட்கப்பட்டதாக மக்கள் குறைப்படுகிறார்கள். (க-51)

# பசுக் கொலையை சகிக்க முடியாது இந்தியாவுக்கு ஓடினார் ஞானப்பிரகாசர்

**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசர் சுவாமிகள் குருபூசை தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**கா.சிவபாலன்**

யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தேடித்தந்த மகான் சுவாமி ஞானப்பிரகாச முனிவர், திருநெல்வேலிப் பெரியார் காராளப்பிள்ளைக்கு மகவாகப் பிறந்தவர் இவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் மூதாதையர். நாவலர் பெருமானால் துதிக்கப்பட்டவர். நீர்வேலி சிவசங்கரபண்டிதரால் 'சிவாநுபூதிமான்' எனக் கணிக்கப்பட்டவர்.

இற்றைக்கு 450 ஆண்டுகளுக்கு முன் அவதரித்தவர் சுவாமி ஞானப்பிரகாச முனிவர். பறங்கியர் ஆட்சிக்காலம (1505 - 1556) மிகக் கொடுமையான காலம். யாழ்ப்பாணத்தவர் வாழையிலையில் சாப்பிடுவது சமயத் துரோகம், பசுக்கொலை பெரிய புண்ணியச செயல் என்று சொன்ன காலம் அது.

அந்தக் காலத்திலே ஒவ்வொரு வீட்டாரும் அரசனுடைய உணவுக்காக ஒரு பசுவைக் கொடுக்க வேண்டும் என்பது சட்டம்.

பசுக் கொலையைச் செய்ய அஞ்சினார் முனிவர். பசுக்களை தெய்வமாகப் போற்றுகின்ற மக்கள் வாழும் நாடு நமது நாடு. பசுக்கொலை பெரும பாவம் என்று கருதி, இக்கொடுமையைச் சகிக்க முடியாது இரவோடு இரவாகக் கட்டு மரத்தில் ஏறி இந்தியா சென்றார் முனிவர். பாக்குநீரிணையைக் கடந்து வேதாரணியத்தை அடைந்தார்.

மகான் ஞானப்பிரகாசர் சிதம்பரம் சென்று சிவகாமி அம்மை சமேத நடராஜப் பெருமானை வழிபாடு செய்தார். 49 தினங்கள் பெரும் தவம செய்தார். அங்கு உபவாசம் இருந்தார். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சுவாமிகள் ஆனார். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசர் குளம் அமைத்தார். ஞானப்பிரகாசர் மடம் அமைத்தார். பெரும் தொண்டுகள் ஆற்றினார்.

ஆண்டு தோறும் நடைபெறும் மார்கழி மாத திருவெம்பாவைக் காலம் சைவ மக்களுக்கு சிறப்புப் பெறுகின்றது. திருவாதிரை ஆருத்திரா தரிசன விழாவுக்குச் சிதம்பரம் செல்லும அடியார்கள் அனைவரும் ஞானப்பிரகாசர் மடத்தில் தங்கியும், குளத்தில் நீராடியும் பெரும் புண்ணியப்பேறு பெறுகிறார்கள். சிதம்பரத்திலுள்ள தச மடங்களில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு 'செவ்வாய்க்கிழமை மடம்' பெருமை தருகிறது.

ஈழமண்டல சதகம் இயற்றி அதற்கு உரையும் செய்தவர் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை.அவர் இயற்றிய சதகச் செய்யுள்களில் நான்கு பாடங்களில் ஞானப்பிரகாசர் வரலாறு இடம்பெற்றுள்ளது.

ஞானப்பிரகாச சுவாமிகளின் வரலாறுகளை ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர், திருமயிலை சே.ஜம்புலிங்கம் பிள்ளை, பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார். சு.சிவபாதசுந்தரம், பல்கலைப்புலவர் க.சி.குலரத்தினம் போன்ற பலரும் எழுதியுள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலரிலும், சிதம்பரம் கும்பாபிஷேக மலரிலும் இவரது வரலாறு இடம்பெற்றுள்ளது.

சுவாமிகள் தமிழில் இயற்றிய நூல் சிவஞான சித்தியார் உரைமாத்திரமே ஆகும். மற்றவை வடமொழி நூல்களான பௌஷ்கராகம விருத்தி, சித்தாந்த சிகாமணி பிரமாண தீபிகை, பிராசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம் சிவயோகசாரம் போன்றனவாகும்.

சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், பசுக்கொலைக்கு அஞ்சி பாரததேசம் சென்றவர். நாவலர் பெருமான் அவர் வழிவந்தவர். தமிழ்நாடு சிதம்பரத்தை அலங்கரித்த பூரண சிவாநுபூதிச் செல்வர் சிதம்பரத்தில் குளமும் மடமும் அமைத்த பெரும் சைவத் தொண்டர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி ஞானப்பிரகாச முனிவர் பங்குனி மாதத்துப் பூச நட்சத்திரத்தில் சிவபதம் அடைந்தார். பசுக்கொலைகள் போன்றவற்றுக்கு அஞ்சுகின்ற நாம் குருபூசைத்தினத்தில் சுவாமிகளை அஞ்சலித்து வழிபாடு செய்வோமாக. ★

# ஸ்ரீ பரமானந்தா சுவாமி அவர்களின் குருபூசை



ஸ்ரீ பரமானந்தா சுவாமி அவர்களின் குருபூசை நாளை (04.04.2001)புதன்கிழமை வதிரியிலுள்ள ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. அன்று ஆச்சிரமத்திலுள்ள முருகப் பெருமான் ஆலயத்தில் காலை 8 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகி சுவாமியின் சமாதியில் ஆராதனை, திருமறை ஓதல், பஜனை ஆகியவற்றைத் தொடர்ந்து மாகேஸ்வர பூசையுடன் நிறைவுபெறும்.

அன்பர்கள், அடியார்கள், ஆதரவாளர்கள் அன்றைய நிகழ்வுகளில் வந்து பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வதிரி,
கரவெட்டி. (86130) - தர்மகர்த்தாக்கள் சபை.



## மானிப்பாய் சோதிவேம்படி அருள்மிகு ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான 7ஆம் வருட வசந்த நவராத்திரி விழா

### விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

பங்குனி 12ஆம் நாள் 25-3-2001 ஞாயிறு ஆரம்பமாகி 2.4.2001 திங்கள்வரை பக்தி பூர்வமாக நடைபெற்று 3.4.2001 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு காளியம்பாள் நகர்வீதி உலா நடைபெறும். 4-4-2001 புதன் காலை 9 மணிக்கு ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் 109 அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

சோதி வேம்படி
ஸ்ரீ காளியம்பாள் இந்து இளைஞர் மன்றம்.

விளம்பர அன்பளிப்பு:

1. பிறேம் நகை மாடம்.
2. நியூ ராஜன் சலூன்.
3. சிவா ரெயிலறிங் சென்ரர்.
4. நியூ ஸ்ரார் ரெயிலறிங் சென்ரர்.
5. பாலா அரைக்கும் ஆலை.
6. நவக்குமரன்ஸ் மருந்தகம்.
7. மோகன் ஸ்ரூடியோ அன் வீடியோ சென்ரர்.
8. மகாலக்சுமி பற்றறி சார்ஜ்.
9. இலங்கை வங்கி, மானிப்பாய்.
10. காயத்திரி பென்சி ஹவுஸ்.
11. க.பாஸ்கரன் குளிர்சாதன திருத்தகம்.

*பிரதான வீதி, மானிப்பாய்.* (86116)



## ஆறாத்துயரில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 05 - 1937

உதிர்வு 10 - 04 - 1995

### அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்

(முன்னாள் உதவி முகாமையாளர் - இலங்கை வங்கி)

திதி: 03-04-2001

பூவிழந்து பொட்டிழந்து பொற்தாலி தானும் இழந்து தக்க துணை தானும் இன்றி தனிமையில் தான் உழன்று ஆண்டுகள் ஆறு ஆகினதே ஆறவில்லையே எம்துயரம்! இன்னும் எத்தனை ஆண்டுகள் இத்துயரில் நாம் வாழ தங்கள் ஆன்மா இறைவனடியில் அமைதி பெற்றிட இறைஞ்சும் உங்கள்

*66/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.* (86132) - குடும்பத்தினர்.


# வலி. வடக்குப் பகுதியில் சுழற்சிமுறையில் மின்வெட்டை அமுல்படுத்தக் கோரிக்கை

வலி.வடக்கு,ஏப்.3

வலி. வடக்குப் பகுதியில் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் மின்வெட்டை சுழற்சி முறையில் மேற்கொள்ளுமாறு வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் கேட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர், மாவட்ட முகாமையாளர், பொறியியலாளர் ஆகியோருக்கு இம்மாதம் மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்விகற்கும் நேரமான இரவு 7 மணிமுதல் 9 மணி வரையும், காலையில் 5 மணி முதல 7 மணி வரையும் இம்மின்வெட்டு நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றமையால் அவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-86)

## புற்றளையில் இரு வீடுகளில் திருட்டு

ஒரே இரவில் புலோலி புற்றளையில் இரண்டு வீடுகளில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், சயிக்கிள், றேடியோ, மணிக்கூடு ஆகியவை திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இத்திருட்டுக்கள் இடம்பெற்றன. காற்றுக்காக வீட்டின் கதவுகளைத் திறந்து விட்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளை, புலோப்பளையில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு தங்கியிருந்த வைத்திலிங்கம் ஜெயவீரசிங்கம் என்பவரின் வீட்டில் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், சயிக்கிள் ஆகியவை அபகரிக்கப்பட்டுள்ளன.

இவரின் வீட்டுக்கருகில் உள்ள சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து தங்கியுள்ள வீட்டில் புகுந்த திருடர்கள் அங்கிருந்து றேடியோ, மணிக்கூடு, மேசைமீது வைக்கப்பட்டிருந்த 'பர்ஸ்' ஆகியவற்றை எடுத்துச்சென்றுள்ளனர். இத் திருட்டுக்கள் தொடர்பாக பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-117)

## சுண்ணாம்புச் சூளையை அகற்றக் கோரி மகஜர்

சாவற்கட்டு கிராமத்தில் சூழலுக்கு அச்சுறுத்தலாக உள்ள சுண்ணாம்புச் சூளையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சாவற்கட்டு கடற்றொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் பிரதேச செயலரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

கிராமத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்திருக்கும் சுண்ணாம்புச் சூளை அங்கு வாழும் குடும்பங்களுக்கு சுகாதார ரீதியில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவருவது மட்டுமன்றி சூழலையும் மாசுபடச் செய்துள்ளது என்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-100)

## ஆறு நவீன பயிற்சி விமானங்கள் கொள்வனவு

கொழும்பு,ஏப்.3

ஸ்ரீலங்கா விமானப்படை கடந்த வாரமும் சீனத் தயாரிப்பான கே 8 ரகத்தைச் சேர்ந்த 6 பயிற்சி விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

இவற்றைப் பொருத்தி, பரீட்சார்த்தமாகச் செலுத்தி கையளிப்பதற்கென விரைவில் சீனத் தொழில்நுட்பக் குழுவொன்று கொழும்பு வரவிருக்கின்றது. (க-20)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி,ஏப்.3

சாவகச்சேரி நகர சபையில் கடந்த 25 வருடங்களாகக் காவலாளியாகக் கடமையாற்றி இளைப்பாறிய தோமஸ் றாக்கஸுக்கு நகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

நகரசபை செயலாளரும் சங்கத்தின் தலைவருமான மு.செ.சரவணபவ தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (க-117)


மது கல்வி நிறுவனம்

O/L DAY CLASS

(7.00 - 2.00)

29-3-2001 முதல் நடைபெறுகின்றன!

*டச்சு வீதி, கோப்பாய்.* (C/16009)


## ஆத்திரத்தில் கன்னத்தைக் கடித்துக் குதறிய நபர்

யாழ்ப்பாணம்,ஏப்.3

கயிறிழுத்தல் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்காததால் ஆத்திரமுற்ற ஒருவர் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்காதவரை கடித்துக் குதறிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

முகத்தின் கன்னப் பகுதியில் கடிகாயங்களுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த தேவசகாயம் சில்வா (வயது 40) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கன்னத்தைக் கடித்தவர் இடம்பெயர்ந்தவர் என்று போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்காததாலேயே இந்தச்சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது. (க-117)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

03.04.2001

HAPPY



BIRTHDAY

### செல்வன் தேவராஜா லக்ஸ்மன்

ஊரியவத்தை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி R.தேவராஜா - புஸ்பானந்தறாபி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன்

லக்ஸ்மன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (03.04.2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். செல்வன் லக்ஸ்மனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார், அத்தை (வவுனியா), மச்சான்மார், மச்சாள்மார், சித்திமார், சித்தப்பாமார், ஐயா (நெல்லியடி), பெரியம்மாமார், பெரியப்பாமார், அண்ணன்மார், அக்காமார், தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் புனித அந்தோனியாரின் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*ஊரியவத்தை, பருத்தித்துறை.* (86151) சித்தப்பா R.நித்தி



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 - 10 - 1930

உதிர்வு 13 - 04 - 2000

### திருமதி சின்னம்மா செல்லத்துரை

(சீனி அம்மா)

திதி:- 03-04-2001 தசமி

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் மாறாதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

*நிரந்தர முகவரி:* தண்ணீர்த்தாழ்வு, தெல்லிப்பழை.

*தற்காலிக முகவரி:* ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

*உங்கள் பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர். (86079)

### தென் சீனக் கடலின் வான் பரப்பில்

# அமெரிக்க விமானத்துடன் மோதிய சீனப்போர் விமானம் நொறுங்கியது!

## விபத்துக் குறித்து பரஸ்பரம் குற்றச்சாட்டு இருதரப்பு உறவு மோசமடையும் நிலை

பெய்ஜிங், ஏப்ரல் 3

**அமெரிக்கக் கடற்படை ரோந்து விமானம் உரசியதால் சீனப் போர் விமானம் ஒன்று நொறுங்கி விழுந்தது. இந்த விபத்துக்கு இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதனால் அவற்றுக்கு இடையேயான உறவு மேலும் மோசமடையக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.**

தென் சீனக் கடலின் கைலான் தீவுச்சருகே அமெரிக்கக் கடற்படை விமானம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் —

சீனாவின் எவ்-18 ரக போர் விமானம் அமெரிக்க விமானத்தை வழி மறித்ததாகவும்.

அந்தச் சமயத்தில் அமெரிக்க விமானத்தின் முகப்பும், இறக்கையும் சீன விமானத்தில் உராய்ந்ததால், அது தென் சீனக்கடலில் விழுந்து நொறுங்கியதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தையடுத்து அமெரிக்க விமானம், அதிலிருந்த இரு விமானிகள் மற்றும் 22 கடற்படை வீரர்களுடன் சீனாவின் கைலான் தீவில் அவசரமாகத்தரையிறங்கியுள்ளது.

விபத்து நடந்த சமயத்தில், அமெரிக்க விமானம், சர்வதேசக் கடற்பகுதியின் மேல் பறந்து கொண்டிருந்ததாகவும்—

பாதுகாப்பற்ற வகையில் சீன விமானம் அதனைப் பின் தொடர்ந்ததே விபத்துக்குக் காரணம் என்றும்—

அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்டகன்' தெரிவித்துள்ளது.

சீன விமானம் விபத்திற்குள்ளானதுக்கு, அமெரிக்க விமானத்தின் திடீர் சாகச நடவடிக்கையே காரணம் என்று சீனப்பாதுகாப்புத்துறை கூறியுள்ளது.

இத்தகைய பரஸ்பரக் குற்றச்சாட்டுகளால் இரு நாடுகளிடையேயான உறவு மேலும் சிக்கலாகும் நிலை உருவாகியுள்ளது.

துல்லியமான கண்காணிப்புக் கருவிகள் கொண்ட ஈ.பி. ஜி-3 ரக அமெரிக்க விமானம் தற்போது சீனாவின் வசம் உள்ளது. அந்த விமானத்தையும், அதன் பணியாளர்களையும் உடனடியாக அமெரிக்கா வசம் ஒப்படைக்கும்படி சீனாவுக்கான அமெரிக்கத் தூதர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க விமானத்தில் உள்ள அதிஉயர் தொழில்நுட்பக் கருவிகளை சீன விஞ்ஞானிகள் ஆராயக் கூடும் என்று அமெரிக்கத் தரப்பில் அஞ்சுவதாகக் கருதப்படுகிறது. (ஒ-6)

## அமெரிக்காவின் நிலுவைத் தொகை

ஐ.நாவுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை அமெரிக்கா செலுத்தாமல் இருப்பது ஐ. நா. அங்கத்துவ நாடுகளின்மத்தியில்கசப்புணர்வை அதிகரித்துள்ளது.

100 கோடி அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான நிலுவைத் தொகையை அமெரிக்கா ஐ நாவுக்கு செலுத்த வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## காலையில் கோப்பி தயாரித்து மனைவிக்கு வழங்கும் அதிபர் புஷ்



வாஷிங்ரன், ஏப். 3

அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின்னரும், தனது மனைவிக்கு காலையில் படுக்கைக்குக் கோப்பி எடுத்துச் சென்று கொடுக்கும் பழக்கத்தை ஜோர்ஜ் டபிள்யு புஷ் நிறுத்தவில்லை.

செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் புஷ்ஷின் மனைவி லோறா இதனைப் பெருமை பொங்கத் தெரிவித்தார்.

டெக்ஸாஸ் மாநில கவர்னராகப் புஷ் பதவி வகித்த போதும், தனக்குக் காலையில் படுக்கைக்குக் கோப்பியை எடுத்து வந்து தருவது அவரது வழக்கம் என்றும் —,

அதிபர் மாளிகையில் பல சேவகர்கள் உள்ளபோதும், புஷ் கோப்பி எடுத்து வரும் வழக்கத்தை மாற்றவில்லை என்றும் லோறா கூறினார்.

காலையில் 5.30 மணிக்கு எழுந்துவிடும் புஷ் சமையலறைக்குச் சென்று கோப்பி தயாரித்துப் படுக்கைக்குக் கொண்டு வந்து தருவதாகவும், இருவருமாகக் கோப்பி குடித்தபடியே பத்திரிகைகளைப் படித்து விஷயங்கள் பற்றி விவாதிப்பது மகிழ்ச்சியான வேளை என்றும் லோறா பரவசத்துடன் தெரிவித்தார். (ஒ)

### ஐ. நா. கண்காணிப்பில் உள்ள பிரதேசத்தில்

## மஸிடோனியப் படையின் ஷெல்லுக்கு செய்தியாளர் உட்பட இருவர் பலி!

ஸ்கொப்ஜே, ஏப். 3

மஸிடோனியப் படைகள் ஏவிய ஷெல்லுக்கு பிரிட்டிஷ் செய்தியாளர் உட்பட இருவர் பலியாகியுள்ளனர்.

ஐ. நாவால் நிர்வகிக்கப்படும், யூகோஸ்லாவியப் பிரதேசமான கொசோவோவில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற 'கிரிவெளிக்' கிராமத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பிரிட்டிஷ் செய்தியாளரே ஷெல்லுக்குப் பலியாகியுள்ளார். அவருடன் சென்றிருந்த படப்பிடிப்பாளர் மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

பலியான மற்றொருவர் அல்பேனிய இனத்தைச்சேர்ந்தவராவார். அத்துடன்சுமார் 20 பொதுமக்கள் ஷெல்வீச்சில் காயமடைந்துள்ளனர்.

கொசோவோ வாவுடனான மஸிடோனியஎல்லைப்பகுதிக்குள் ஊடுருவிய அல்பேனியத் தீவிரவாதிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கையில் மஸிடோனியப் படைகள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது ஷெல் வீச்சினாலேயே மேற்படி இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கொசோவோவில் இருந்து அல்பேனியத் தீவிரவாதிகள் மஸிடோனிய எல்லைப்புற மலைப் பிரதேசங்களுக்குள் ஊடுருவினர். அன்று முதல் தீவிரவாதிகளுக்கும் மஸிடோனியப் படைகளுக்கும் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மோதல்களில் யூகோஸ்லாவியப் பிரதேசமான கொசோவோவாவில் நிகழ்ந்த பாரிய சம்பவம் இதுவென்று கருதப்படுகிறது. (ஒ)

### உலக அரங்கில்

## கிரேக்கத்தில் சிக்கியுள்ள 250 குடியேறிகள்

ஏதென்ஸ், ஏப். 3

கிரேக்கத்தில் 250 இற்கும் மேற்பட்ட குர்திஷ் இன சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளைக் கிரேக்க அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

இந்தச் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் பயணம் செய்த படகு ஏதென்ஸுக்கு அருகில் ஹெவியா என்ற தீவில் தரை தட்டியதை அடுத்து அவர்கள் கிரேக்க அதிகாரிகளிடம் சிக்கினார்கள்.

இவர்களில் 16பெண்களும், 12 சிறுவர்களும் உள்ளனர்.

### இன ஒழிப்புக் குற்றச்சாட்டின் கீழ்

## முன்னாள் அதிபர் மிலோசெவிக் யூகோஸ்லாவியாவில் கைது!

பெல்கிரேட், ஏப். 3

யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலோபொடான் மிலோசெவிக் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மிலோசெவிக்கைக் கைது செய்ய பிடியாணையுடன் சென்ற அதிகாரிகள் மற்றும் பொலிஸார் 35 மணித்தியாலங்கள் அவரது பாதுகாவலர்களுடன் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர். அதன் பின்னரே மிலோசெவிக் கைது செய்யப்பட்டார்.

அவரை 30 நாள்கள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகச் செர்பியத் தேசிய தொலைக்காட்சி அறிவித்தது.

1999ஆம் ஆண்டு கொசோவோவில் அல்பேனிய மக்களுக்கு எதிராக இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் —

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பணமோசடிகள் செய்ததாகவும் —

மிலோசெவிக் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்களுக்கான ஐ.நா. நீதிமன்றத்தில் இவரை விசாரிக்கும்படி மேலை நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

கைதாவதற்கு சிலநாள்கள் முன்னரே, மிலோசெவிக் கைதாகி விட்டதாகத் தவறான செய்திகள் பரவியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ 6)

## இந்திய அரசு மீது முலாயம்சிங் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 3

இந்தியாவில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்குமாறு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாக சமாஜ் வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனை மறுத்துள்ள பிரதமர் அலுவலகம், இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று கூறியுள்ளது.

### தமிழக அரசியலில்...

## தி.மு.கவிலிருந்து தமிழ் குடிமகன் அ.தி.மு.கவுக்கு கட்சி தாவினார்

சென்னை, ஏப். 3

தமிழக இந்து அறநிலைய, தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த தமிழ் குடிமகன் தி.மு.கவிலிருந்து விலகி அ.தி.மு.கவில் சேர்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை, அவரது இல்லத்தில் தமிழ்க் குடிமகன் சந்தித்து அ.தி.மு.கவில் இணைவதாகத் தெரிவித்தார். முன்னதாக தனது பதவி விலகல் கடிதத்தை முதல்வருக்கு அவர் அனுப்பி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்க் குடிமகன் தி.மு.க. ஜாதி அமைப்புகளுக்கு தேவையற்ற முக்கியத்துவம் அளிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். 96 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழ்க் குடிமகன்போட்டியிட்டுவென்ற இளையான் குடித்தொகுதி, எதிர்வரும் தேர்தலில் அவருக்கு வழங்கப்படாததாலேயே அவர் கட்சி மாறியதாகக் கூறப்படுகிறது.

89—95 காலப்பகுதியில் தமிழக சட்டப் பேரவை சபாநாயகராகப் பதவி வகித்த தமிழ்க்குடிமகன் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈடுபாடு காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## தொகுதிப் பங்கீடுகள் குறித்து அ.தி.மு.க.கூட்டணியில் பிணக்கு

சென்னை, ஏப். 3

தேர்தல் தொகுதிகள் பங்கீடு தொடர்பாக, அ.தி.மு.க. கூட்டணியில் பிணக்குத் தோன்றியுள்ளது.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் த.மா.காவுக்கும், காங்கிரஸுக்கும் மொத்தம் 47 தொகுதிகளை அ.தி.மு.க. பொதுச் செயலாளர், ஜெயலலிதா வழங்கியிருந்தார். அவற்றில் 32 இடங்களில் த.மா காவும், 15 இடங்களில் காங்கிரஸும், போட்டியிடுவதாகக் கூறப்பட்டது.

ஆனால் தற்போதைய சட்டசபையில் த.மா.காவுக்கு 36 உறுப்பினர்கள் உள்ளதாகவும் —

அந்த 36 தொகுதிகளிலும் எதிர்வரும் தேர்தலில் த.மா.கா. போட்டியிட வேண்டும் என்றும் —

த.மா.கா. தலைவர் மூப்பனார் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இதற்கு ஜெயலலிதா ஒப்புக் கொள்ள மறுப்பதால் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மாவட்டங்களில், குறிப்பாக தேவர் இன மக்கள் உள்ள தொகுதிகளில் அ.தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது ஆகையால் அந்தத் தொகுதிகளை த.மா.காவுக்கு விட்டுக் கொடுக்க ஜெயலலிதா தயக்கம் காட்டுகிறார். (ஒ-6)

இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை

# ஏல விற்பனை

எல்வ் வான் உதிரிப்பாகங்கள், துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், கட்டுக்கம்பி 2600 கிலோ, பாவித்த பிக்அப் ரயர்கள், றோனியோ இயந்திரம், மருந்தாளர் கவுண்டர், பனைமரங்கள், பி. வி. சி. பைப்கள், தட்டச்சு இயந்திரங்கள், வெற்று இனிப்புப் போத்தல்கள், துணிகள் ஆகியன எமது கிளையில் 11-04-2001 புதன் முற்பகல் 10-30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சித்திபெறும் கேள்விக்காரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி அவற்றை அன்றைய தினமே எடுத்துச் செல்ல வேண்டும்.

இப்பொருள்களை 10-04-2001 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணி முதல் 4-00 மணி வரை பார்வையிடலாம்.

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/16022)

மானிப்பாய் கோவில்பற்று
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# சேமிப்பு மீதிகள் உறுதிப்படுத்தல்

எமது சங்கத்தின் 2000 ஆம் ஆண்டு நிதிவருடத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், சங்க கிராமிய வங்கியில் சேம வைப்புகளை உடையவர்கள் 31—12—2000 ஆம் திகதியில் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தும் வகையில் 05—04—2001, 06—04—2001 ஆகிய தினங்களில் சங்க கிராமிய வங்கியில் தமது சேமிப்புப் பதிவேடுகளையும், நிரந்தர வைப்புச் சான்றிதழ்களையும் கணக்காய்வாளர்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

- பொது முகாமையாளர்.

(சி/16019)

வலி-கிழக்கு பிரதேச சபையினால்
நடத்தப்படும் விளையாட்டுக
கழகங்களுக்கு இடையிலான போட்டிகளுக்கான

# விண்ணப்பம் கோருதல்

வலி- கிழக்குப் பிரதேச சபையால் நடத்தப்படும் விளையாட்டுக் கழகங்களுக்குகிடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. மரதன் ஓட்டம்:-**
ஆண், பெண் (எமது எல்லைக்குட்பட்டவர்கள்)
அனுமதிச் சட்டணம் — ரூபா 10-00

**02. சைக்கிள் ஓட்டப்போட்டி**
ஆண், பெண் (மாவட்ட ரீதியில்)
அனுமதிக்கட்டணம் — ரூபா 25-00

**03. மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**
(மாவட்ட ரீதியில்)
அனுமதிக்கட்டணம் — ரூபா 100-00

மேற்குறிப்பிட்ட போட்டிகள் எதிர்வரும் 12-04-2001ஆம் திகதியன்று இடம்பெறும். இதற்கான விண்ணப்பங்கள் போட்டியின் இறுதிநாள் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தடகளப் போட்டிகள், கிரிக்கெற் (மென்பந்து), வலைபபந்து, உதைபந்து, எல்லே, தாச்சி, கரப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான விண்ணப்பங்களும் எமது எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அனுமதிக்கட்டணம் — ரூபா 50-00
விண்ணப்ப முடிவுதிகதி - 05-04-2001

07-04-2001 ஆம் திகதி அணி ஒழுங்குத் தெரிவு இடம் பெறவிருப்பதால், ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை, வலி. கிழக்குப் பிரதேச சபைத்தலைமை அலுவலகத்தில் பி. ப. 3-00 மணிக்கு சமுகந்தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. பூ. குணசிங்கம்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்,
வலி கிழக்குப்பிரதேச சபை,
நீர்வேலி.

வலி - கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
(சி/16021)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்று வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

★ வேம்படி மகளிர் எதிர் யாழ். இந்து மகளிர்.

★ திருக்குடும்ப கன்னியர் மடம் எதிர் கனகரத்தினம் ம. வி.

**17 வயதுப் பிரிவு**

★ வேம்படி மகளிர் எதிர் யாழ். இந்து மகளிர்.

★ சுண்டுக்குழி மகளிர் எதிர் கனகரத்தினம் ம. வி.

**19 வயதுப் பிரிவு**

★ வேம்படி மகளிர் எதிர் கொக்குவில் இந்து.

★ இடைக்காடு ம. வி. எதிர் யாழ். இந்து மகளிர்.

(உ-3)

★ ★ ★

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3. 00 மணி முதல்இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**கிறிஸ்தவ கல்லூரியில்**

★ 15 வயதுப்பிரிவு—யாழ். மத்திய கல்லூரி எதிர் சோமஸ்கந்த கல்லூரி.

★ 17 வயதுப் பிரிவு—ஆவரங்கால் மகாஜனா எதிர் யாழ். மத்திய கல்லூரி.

★ 19 வயதுப் பிரிவு—ஆவரங்கால் மகாஜனா எதிர் கனகரத்தினம் ம. ம. வி

**யாழ் மத்திய கல்லூரியில்**

★ 15 வயதுப் பிரிவு—நடராஜ ராமலிங்கம் ம. வி. எதிர் பரியோவான் கல்லூரி.

★ 17 வயதுப் பிரிவு கிறிஸ்தவக் கல்லூரி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி.

★ 17 வயதுப் பிரிவு — நல்லூர் சாதனா எதிர் நடராஜா இராமலிங்கம் ம. வி.

★ 19 வயதுப் பிரிவு — கிறிஸ்தவக் கல்லூரி எதிர் புனிதசாள்ஸ் ம. வி.

(உ-3)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி — யாழ். பல்கலைக்கழக 'கோல்ட்' அணி எதிர் கோப்பாய் வி. க. அணி

★ பிற்பகல் 4.30 மணி — வட்டுக்கோட்டை ஒல்ட் கோட் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக நீல அணி.

(3-86)

# சமய 'சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஏப். 3

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 30 மணிக்கு ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (க-3)

★ ★ ★

அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த 108 சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறுகிறது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு திருவீதி உலா இடம்பெறும்.

நாளை புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு குளிர்த்தி அபிஷேகம் நடைபெறும் (ஒ)

# சூரியனின் பாரிய கரும்புள்ளி; பூமியை விட 13 மடங்கு பெரியது!

## நேரடியாகப் பார்ப்பதைத் தவிருங்கள்

சூரியனின் மேற்பரப்பில் பாரிய கரும்புள்ளி ஒன்றைத் தற்போது காணக்கூடியதாகவுள்ளது இது புவியின் மொத்தப் பரப்பளவை விடப் 13 மடங்கு பெரியது என்று கூறப்படுகிறது.

இலங்கை மக்கள் சூரியனின் மேற்குப் பகுதி ஓரங்களில் இந்த அதிசயத்தைக் காணக் கூடியதாக இருக்குமென்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி சந்தனஜயரத்ன தெரிவிக்கின்றார்.

சூரியனை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விளக்கில் பிடித்து கறுப்பாக்கப்பட்ட கண்ணாடி அல்லது எக்ஸ் றே படங்கள் முதலானவற்றின் மூலமாக இதனை அவதானிக்கலாம். சூரியனின் மேற்பரப்பில் காணப்படும் கரும்புள்ளிகள், காந்தப் புலன்கள் செறிவதனால் ஏற்படும் குறைந்த வெப்ப வலயங்களால் உருவாகின்றன. அதே சமயம் சூரியனிலிருந்து நான்குபாரிய தீச்சுவாலைகள்கிளர்ந்தெழுந்துள்ளதாகப் பேராசிரியர் ஜயரத்ன கூறுகின்றார்.

இதனால் விண்வெளியில் பாரிய வெப்பத் துகள்கள் பரவி இருக்கின்றன. இவை சிற்றலை வரிசை வானொலி ஒலிபரப்புகளைத் தடை செய்யக்கூடும். அத்துடன் மின் மாற்றிகள் மின்னைக் காவும் கம்பிகள் முதலானவற்றையும் தாக்கக்கூடும் என்றும் அவர் கூறுகின்றார்.

(க-9)

உடற்கல்வி முதலாம் அணி
மாணவர்களுக்கான

# அவசர கலந்துரையாடல்

மேற்படி மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு
தொடர்பான கலந்துரையாடல்
நாளை (4-4-2001) புதன்கிழமை
காலை 10-00 மணியளவில்
D. M. I. கல்வி நிலையத்தில்

நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(86208)
-பிரதிநிதி

# கண்ணீர் அஞ்சலி

யாழ். ஹரன் ஜுவல்லர்ஸ் உரிமையாளர்
சி. மார்க்கண்டு
அவர்களின் அன்பு மனைவி

## திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள்

அவர்களின் மறைவு கேட்டு வேதனையடைந்தோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப பிரார்த்திக்கின்றோம்.

செந்தில் குடும்பம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(சி/16024)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



உரும்பிராய் கிழக்கு

## வைத்திலிங்கம் தம்பிராசா கந்தசாமி

(ஆசிரியர் - V.T.K.)

அன்புடையீர்!

04-03-2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் தம்பிராசா கந்தசாமி ஆசிரியர் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (03-04-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தாங்களும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(86212)



யாழ் மாநகர மேயருக்கும் நிர்வாகத்துக்கும் முழு ஆதரவும் நம்பிக்கையும் தெரிவித்து மாநகரசபை ஊழியர்கள் நடத்திய ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.



குடும்ப நல உதவியாளர்கள் சார்பில் நேற்று உண்ணாவிரதம் இருந்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள்:- கொனிக்கா கலர் லாப்)*

# நியாயமான உரிமைகளுக்காக போராடினால் அதனை ஏற்கலாம்

## தமது நிலைப்பாட்டை விளக்குகிறார் யாழ் மேயர்

யாழ்ப்பாணம்,ஏப்.3

"மாநகர சபை குடும்ப நல உத்தியோகத்தர்கள் தமது வேலை தொடர்பாக, சம்பளம் தொடர்பாக, தமது உரிமைகள் தொடர்பாக நியாயமானதோர் போராட்டத்தை நடத்தினால் அதனை நாம் ஏற்றுக்கொண்டு மாநகர சபைக்கு ஊடாக உரிய நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்க முடியும்."

- இவ்வாறு யாழ் மாநகர சபை முதல்வர் இ.ரவிராஜ் தெரிவித்தார். நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் மாநகர சபை அலுவலகத்தில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

'மாநகர சபை ஆணையாளரை வேலையில் இருந்து நிறுத்து', 'மாநகர சபையைக் கலைத்து விடு!', என்ற கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் நடத்தும் இந்தப் போராட்டம் நியாயமற்றது.

ஊழியர்கள் தமக்குரிய பிரச்சினைகள் தொடர்பாகக் கதைப்பதற்கும் போராட்டம் நடத்துவதற்கும் உரிமை உடையவர்கள். ஆனால் நிர்வாகத்துக்கு எதிராக எந்தவொரு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

குடும்பநல உத்தியோகத்தர்களின் சம்பளங்களை வழங்க நாம் தயாராகவே இருக்கின்றோம். கடந்த 9ஆம் திகதி சம்பளப் பட்டியலுடன் பிரதி மேயர் மாநகரசபை அலுவலகத்தில் காத்திருந்த போதும் அந்த ஊழியர்கள் வந்து சம்பளத்தைப் பெறவில்லை.

ஆனால் தற்போது சம்பளத்தை வழங்கவில்லை என்று குறை கூறியுள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்கள் யாராவது நேரடியாக எம்முடன் வந்து கதைத்தால் அதனைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

மாநகர சபையை கலைப்பதற்கு எம்மாலோ அன்றி அமைச்சராலோ இலகுவில் முடியாது. சட்டப்படி இயங்கும் மாநகர சபையை ஜனநாயக நாட்டில் எவராலும் கலைக்க முடியாது.

எமக்கு மக்களின் சேவையே முக்கியமானது. அதற்காக நாம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கத் தயாராக இருக்கின்றோம். இவர்களின் இந்த நியாயமற்ற கோரிக்கைகளையும் போராட்டத்தையும் எம்மால் என்றும் ஏற்றுக்கொள்ளமுடியாது. - என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மாநகர சபையின் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் பிரமுகருமான த.சுபத்திரன் அங்கு கூறியதாவது:-

இந்தப் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்த நாம் விரும்பக் கூடாது. மாறாக சுமுகமாகத் தீர்த்து வைக்கவே முயற்சி எடுக்கின்றோம்.

இந்த விடயத்தில் பிரச்சினைக்குரிய தரப்பினருடன் நேரடியாகப் பேசி அவர்களது நியாயமான கோரிக்கைகளை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் உரிமை தொடர்பான விடயங்களை மட்டும் பரிசீலிக்க முடியும்.

இது தொடர்பாகப் பத்திரிகைகளும் சமூக உணர்வுடன் செயற்பட வேண்டும். பிரச்சினைகளை மேலும் வளர்க்கக் கூடியவாறான செய்திகளைப் பிரசுரிக்காது விடுவதே அவர்களது தார்மீகப் பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் கலாநிதி இ. தெய்வேந்திரனிடமும் நேரடியாகச் சென்று நானும் மேயரும் உரையாடினோம். அவரும்" இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தன்னால் இயலுமான உதவிகளைச் செய்வதாகக் கூறினார்.

சுகாதார ஊழியர்களை நேரடியாகப் பேச்சுக்களை நடத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே நாம் இங்கு காத்திருக்கின்றோம். அவர்கள் இங்கு வந்தால் கலந்துரையாடி சுமுகமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மாநகர சபையின் புளொட் அமைப்பு உறுப்பினரான மு.தவநாதன் கூறியதாவது:-

குடும்ப நல உத்தியோகத்தர்களின் இந்த நியாயமற்ற போராட்டத்தின் பின்னணியில் அரசியல் கட்சி ஒன்று செயற்பட்டுவருவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அவர்களின் தூண்டுதலாலேயே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. இதற்கு ஏற்படும் செலவுகளை அந்தக் கட்சியே வழங்குகின்றது.

சுமுகமாக இயங்கிக் கொண்டிருக்கும் மாநகர சபையில் குழப்பத்தை ஏற்படுத்தி அரசியல் லாபம் தேட முயல்கின்றார்கள். அதற்கு நாம் ஒருபோதும் ஒத்துப்போக முடியாது.

ஊழியர்களின் நியாயமான உரிமைகளுடன் தொடர்புபட்ட விடயங்களை மட்டும் ஊழியர்கள் முன்வைத்தால் அதனை ஆதரிக்க முடியும்.

எமது சக்திக்கே அப்பாற்பட்ட முறையில் மாநகரசபையைக் கலையுங்கள் என்று கூறுமளவிற்கு அவர்கள் முன்வைக்கும் கோரிக்கையை ஏற்கமுடியாது - என்றார்.

(உ.-6-9-10)


# 'முயற்சி'

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்
திறன் விருத்தி மையம்
புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான

## விண்ணப்பம் கோரல்

கீழே குறிப்பிடப்படும் பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறி | கல்வித் தகைமை |
|---|---|
| 01. வயறிங் ரீவைண்டிங் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) சித்தி |
| 02. ரி.வீ.. ரேடியோ திருத்துதல் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) சித்தி |
| 03. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) சித்தி தமிழ் திறமைச் சித்தி |
| 04. உடையமைத்தலும் துணியில் வர்ணம் தீட்டுதலும் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் |
| 05. தையல் இயந்திரம் திருத்துதல் | க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் (பெண்களுக்கு மட்டும்) |
| 06. தமிழ் தட்டச்சு (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) சித்தி தமிழ் திறமைச் சித்தி |
| 07. ஆங்கில தட்டச்சு (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா/த) சித்தி ஆங்கிலம் திறமைச் சித்தி |

**விண்ணப்ப முடிவு திகதி:- 09-04-2001**

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-*


செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி.16026)

- நிர்வாகம்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**லயன், சுந்தரம் சிவபாதசுந்தரம்**
(Maths Sp.Trd. S.L.P.S. 2-1)
(உபஅதிபர் - யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் - 2-1ற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் சிறப்புற வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(86207)


# மரண அறிவித்தல்கள்

## நாகன் கொத்தர்

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் சிவகுல வீதி, உரும்பிராயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் கொத்தர் கடந்த 01-04-2001 ஞாயிற்றுக்கிழமை இரவு அகால மரணமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் சின்னத்துரை, துரைசிங்கம், வீரசிங்கம் (ராசா, லண்டன்), தவேந்தினி ஆகியோரின் அருமைத் தகப்பனும், பஞ்சரத்தினம், வனிதா, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற சுப்பையா, சின்னத்தம்பி (முத்தையன் கட்டு) ஆகியோரின் சகோதரரும் சுவிதா, சுபத்திரா, சுஜாதா, சுபத்தினா, உதயரூபன், டயானா, துவாரகா, பரதன், ராஜிகா, இலக்கியா, கீர்த்தனா, செந்தாளன், விதுரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (02-04-2001) திங்கட்கிழமை உரும்பிராயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய்.*

தகவல்:
என்.கே.துரைசிங்கம்
(கைதடி)

(C/16025)

## கந்தவனம் கந்தசாமி

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகமாகவும், கோயம்புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தவனம் கந்தசாமி - கரவைக்கிழார் 29.03.2001 கோயம்புத்தூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வநாயகம் சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கலாநிதி கபிலமணி **(U.S.A)**, வாணிதாசன் (பிரான்ஸ்), அறிவழகன், இளஞ்சேரன் (இந்தியா), பாவேந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரேமிளி, சற்குணராணி, சுதர்சினி, செறீன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கோயம்புத்தூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகள்:**
*அறிவழகன் T.P. 01-422380*
*பாவேந்தன் - 416-720-1661 (கனடா)*
*கபிலமணி - 1-949-7075906 (U.S.A)*

தகவல்:
பாவேந்தன் (மகன்)

(86210)

# புலிகளின் மக்கள் முன்னணியை தடை செய்வதற்குச் சட்டம் இல்லை

## பிரதித் தேர்தல் ஆணையாளர் கருத்து

கொழும்பு,ஏப்.3

தற்சமயம் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களின் படி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியைத் தடைசெய்ய முடியாது என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்தது போன்று அந்த அமைப்பின் அரசியல் பிரிவான மக்கள் முன்னணியையும் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இது விடயமாகக் கருத்துக் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதுள்ள தேர்தல் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட எந்த அரசியல் கட்சியையும் தடைசெய்யவோ அதன் பதிவை ரத்துச் செய்யவோ முடியாது. அந்தக் கட்சி தனது யாப்பை மாற்றி எமக்கு அறிவித்தால் மட்டுமே அந்தக் கட்சி பற்றிய மாற்றங்களைச் செய்ய முடியும்.

இது விடயத்தில் தேர்தல் சட்டத்தில் மாற்றம் செய்வதாயின் அதற்கு முதலில் அரசமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும். அரசமைப்பு மாற்றப்பட்டாலேயே நாம் விரும்பியபடி கட்சிகளைத் தடைசெய்ய முடியும்

இப்படி அவர் கூறினார். (உ-3)

# தமிழ்க் கைதிகள் 108 பேர் உண்ணாவிரதப் போர்!

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் 108 பேர் நேற்று சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

போலிக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்றோர், வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டோர் என சுமார் 200 பேர் இந்தச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி இந்தச் சிறைச்சாலையிலுள்ள 108 கைதிகள் கூரையில் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் கலந்துரையாடியதன் பயனாக நேற்று மாலை போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

## பிரிட்டனில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஏற்கனவே பல முன்னணி சட்ட நிறுவனங்களுடனும் மனித உரிமைகள் அமைப்புகளுடனும் தீவிர கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தடைக்கெதிராக -

பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்த்த பிரிட்டிஷ் உள் நாட்டலுவல்கள் அமைச்சரிடம் முதலில் மேன்முறையீடு செய்யப்படும்.

அது பலன் தராவிட்டால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புதிதாக ஸ்தாபிக்கப்படும் 'தடை செய்யப்பட்ட இயங்கங்கள் தொடர்பான மேன்முறையீட்டு ஆணைக் குழுவிடம்' மேன்முறையீடு செய்ய முடியும்.

அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடங்கி பிரபுக்கள் சபை வரை சட்ட ரீதியான மேன்முறையீடுகளைத் தொடர்ந்து செய்யலாம்.

அவையும் பயன்தராவிட்டால் மனித உரிமை மீறல் சட்ட ஏற்பாடுகளின் கீழ், ஐரோப்பிய நீதி மன்றத்தில் பிரிட்டனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

இந்த வரிசையில் இறுதி வரை போராடுவதற்கு பிரிட்டனில் உள்ள தமிழ் அமைப்புகள் கங்கணம் கட்டியிருப்பதாக லண்டன் செய்திகள் தெரிவித்தன. (உ)

## விமானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

5ஆம், 6ஆம், 7ஆம் திகதிப் பயணங்களுக்கான பதிவுகளை இன்று மேற்கொள்ளலாம் என்றும்-

2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளுக்கு பதிவுகளை மேற்கொண்டவர்கள் உரிய திகதிக்கு முதல் நாள் சென்று பயணச்சீட்டைப் பெற்றுக கொள்ளலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

முதலாவது சேவைக்கு பயணச்சீட்டுப் பெற்றவர்களை குறித்த திகதியில் காலை 6.30 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

# கண்டனப் பேரணி நடத்த பொலீஸார் அனுமதி மறுப்பு

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவதைக் கண்டித்து அங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிக்கு பொலீஸார் அனுமதி மறுத்துள்ளதை அடுத்து -

பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 7ஆம் திகதி மன்னார் சென்.செபஸ்தியார் ஆலயத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை கண்டிக்கும் வகையில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பெண்கள் கறுப்புத் துணியால் வாயைக கட்டியிருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குடும்பநல உதவியாளர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களது உறவினர்கள், நலன்விரும்பிகள் என சுமார் நூறு பேர் இந்த உண்ணாவிரதத்தில் பங்கு பற்றினர்.

மாநகரசபை மேயர் என்.ரவிராஜ, உதவிமேயர் செல்லன் கந்தையன், மாநகரசபை உறுப்பினர்களான செ. விஜயரத்தினம், எஸ்.அரவிந்தன், த. சுபத்திரன், ம.மங்களநேசன், மு.தவநாதன் ஆகியோர் கூட்டாகச் சென்று உண்ணாவிரதிகளுடன் உரையாடி பிரச்சினையைத் தீர்க்க முயன்றனர்.

ஆனால் உண்ணாவிரதம் இருந்த குடும்பநல உதவியாளர்கள் அவர்களுக்கு முகம் கொடுத்துக் கதைக்கவே மறுத்துவிட்டனர்.

எனினும் நேற்றுப் பிற்பகல் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த க.மணி பல்லவராஜன், ந.திரிலோகநாதன், ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் அங்கு வந்து சேர்ந்ததும் அவர்களுக்கு அங்கு மலர்ச்சியான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்களுடன் உண்ணாவிரதிகள் கலந்துரையாடினர்.

"குடும்பநல உதவியாளர்களின் பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காணப்படவேண்டும். இல்லாவிட்டால் எமது கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சகல பிரதேச சபைகளும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும்" - என்று மணிபல்லவராஜன் உண்ணாவிரதிகளிடம் அறிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கூறி உள்ளூராட்சி அமைச்சருடன் தொடர்புகொள்ள இருப்பதாகவும் - அவர் அங்கு தெரிவித்தார்.

நேற்று மாலை 5 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டத்தை மணிபல்லவராஜன் முடித்து வைத்தார்.

இன்றும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

(உ-3-6-9-10-86)

## யாழ். - கொடிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடிய சமயம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

வரணியில் உள்ள பிரிகேட்டின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் கேதீஷாந்தன், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன், சாவகச்சேரி அமைப்பாளர் சாள்ஸ், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ரவீந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தை மீண்டும் இயக்கவேண்டும் என்றும் -

யாழ்.கண்டி வீதி ஊடாக கொடிகாமம் வரை தினமும் இரு பஸ் சேவைகளை நடத்த வேண்டும் என்றும் -

தென்மராட்சியில் ஏனைய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும் என்றும் -

தூதுக்குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

முதல் இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட பிரிகேடியர் குலதுங்க கைதடிப் பகுதியில் மக்கள் எவ்வித அச்சமும் இன்றி மீளக் குடியமரலாம் என்று தெரிவித்தார்.

இதேபோன்று ஏனைய பிரதேச மக்களும் மீளக் குடியமர்வதில் பிரச்சினை எதுவும் இல்லை என்று தெரிவித்த அவர் நுணாவில், புத்தூர் கிழக்கு ஆகிய பகுதிகளுக்குப் பொது மக்கள் எக்காரணம் கொண்டும் செல்ல வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தார். (உ-3)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமாரின்
விண்ணுக்கும் மண்ணுக்கும்
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (சி/16030)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், விக்ரமன் நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
பிரதிகளை உடன் பெறலாம்.
பிரதி - 300/-
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/16028)

புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், தேவயானி நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில். (சி/16027)

எக்சலன்ற்
நெல்லியடி
O/L DAY CLASS
ஆரம்பம்: வியாழன் 05.04.2001 காலை 7 மணி.
(86164)

விக்னா கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 3 அனுமதிகள் நிரப்தப்பட்டுள்ளன.
பிரிவு 4 ஆரம்பம் 6-4-2001 (8.30-2.00)
பிரிவு 5 மிக மிக விரைவில்.
✪ வாரத்தில் 6 நாள்கள் வகுப்புகள் நடைபெறும்.
✪ தூரதேச மாணவர் நலன் கருதி விடுதி வசதி செய்து கொடுக்கப்படும். (86194)

SUBRA (14)
2003 A/L
புதிய பிரிவு
ACC. - D.SAM
ECO. - S.ஜெயகுமார்
Com. - நந்தீஸ்
Tam. - நாகதமிழிந்திரன்
Log. - E.S.பவன்
Hin.Cul. - ஸ்ரீஸ்
Dra. - A.C.பிரான்சிஸ்
Eng. - விஜயபாஸ்கர்
Chi. - அஜந்தா
Geo. - ஐங்கரன்
Phy. - ஜெயம்
Che. - அன்பு
Bio. - சுரேந்திரன்
- சுகந்தன்
- தயாபரன்
C.Ma. - பிரதீபன்
Iq - உங்கள் ஆசிரியர்
ஆரம்பம்-05-04-2001 வியாழன் - 3.00
(C/15919)

தொழிற் பயிற்சிகள்
✪ Radio TV and Vedio Deck Repairing
✪ Motor Rewinding and Electrical wiring
✪ Motor Cycle Mechanisam
✪ Air Conditioning and Refrigeration
✪ City and Guilds of London exam
சகல தொழிற்பயிற்சிகளும் -ஒரு வருட முழுநேர செய்முறைப் பயிற்சியுடன்
(Practical Training)
பயிற்சியளிக்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம்:-
06-04-2001-(கிழமை நாள்களில்)
07-04-2001 -(சனி, ஞாயிறு தினங்களில்)
விவரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, STANLEY ROAD, JAFFNA.
(C/16018)

NEW HARY'S INSTITUTE
Vaddukoddai East - Sithankerny
Spoken English with GRAMMAR
By: MR.B. SASITHARAN
ஆரம்பம்- நாளை (04-04-2001) புதன்
NOTE:- இலகு வழியில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகிறது.
(C/16020)

நாளை
யாழ். பல்கலைக்கழக கலைவட்டம் வழங்கும்
முதுசம்
நிகழ்ச்சித் தொடர் III
இசைக் கச்சேரிகள்
I திரு. ஸ்ரீ.தர்சனனின் குரலிசை
II திருமதி ர.ஷர்மிலாவின் புல்லாங்குழல் இசை
மாலை 3 மணி
கைலாசபதி கலை அரங்கம்
நுழைவுச் சீட்டுக்கள் வாயிலில்
நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துபவர்கள்:-
சரணியா தொலைத் தொடர்பு நிலையம், காசிப்பிள்ளை கட்டடம், சங்கானை.
T.P 070-212243
கொம்பியூட்டர் பிறின்டிங், றோணியோ, போட்டோ கொப்பி, லெமனற்றிங் என்பனவற்றுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
(86179)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்.(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.